திசை
THISAI

திசை 1 | 4-3-1989 சனிக்கிழமை | விலை : ரூபா 3-50 | முகம் 8

SRI LANKA MUSLIM CONGRESS COLOMBO

A LIFE - SKETCH
OF
Mr. S. Thambimuthupillai
(in English)
Philanthropist, Editor, Poet,
Author, Playwright, Physician
by
Mr. S. John Rajah, Atchuvely
Priced at Rs. 50-00 only
Copies Available With P. Thambimuttu
H. 1. First Floor, Govt. Flats, Colombo. 4.

பொதுத் தேர்தலின் விளைவு: தமிழ் வாக்காளர் ஏற்படுத்தியுள்ள 'சங்கடம்'

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் படுதோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, இதுகாலவரையும் இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இந்திய அரசாங்கம் கையாண்டுவந்துள்ள போக்கில், மாற்றம் ஏற்படலாம் என அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரை 'ஜாக்' அடிக்க எடுத்த முயற்சியின் தோல்வியே, இதற்கு மூலகாரணம் என அவர்கள் கருதுகின்றனர்.

இலங்கை தமது 'வியட்நாமாக' மாறக்கூடாது என்ற கருத்து, இப்பொழுது இந்தியாவில் வலுத்து வருகிறது.

தி. மு. க. எம். பி. திரு. கோபாலசாமி இலங்கை வந்து சென்றுள்ள மர்மமும் இதனுடன் தொடர்புள்ளதாகக் கருதப்படுகிறது.

இச் சந்தர்ப்பத்தில், இப்பொழுது இலங்கையில் இந்தியத் தூதுவராகக் கடமையாற்றும் திரு. தீக்ஷித்பார்க்கில் தானுக்கு மாற்றலாகிச்செல்ல விருப்பமும், புதிய தூதுவர் இங்கு அவ்விடத்திற்கு வரவிருப்பதும் இந்தியாவின் அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என, அரசியல் அவதானிகள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகிறது.

ஈரோஸின் நிலைப்பாடு

அண்மையில் நடந்து முடிந்த பொது தேர்தலில் வட, கிழக்குப் பகுதிகளில் அதிகப்படியான ஆசனங்களைப் பெற்றுக் கொண்டதும் நாடாளுமன்றத்தில் மூன்றாவது பலம் வாய்ந்த கட்டியாகவும் விளங்கும் ஈரோஸ் தாம் நாடாளுமன்றத்தில் பிரவேசிப்பதற்கான சில முன் நிபந்தனைகளை விதித்துள்ளதாகத் தெரிவருகிறது.

இவர்கள் நிலைப்பாடு பற்றி 1-3-89 பி. பி. சி. தமிழோசையில் ஒலிபரப்பான செய்தியின்படி, இது இன்னும் உறுதியாக்கப்படுகிறது.

அதில் ஈரோஸ், இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு உட்பட்ட, ஆனால் இன்னும் நிறைவேற்றப்படாத விடயங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டதுடன், மக்கள் தொண்டர்படை(C.V.F.) பற்றிய தனது அதிருப்தியையும் தெரிவித்திருப்பதாக மேற்படி பி. பி. சி. செய்தி அறிவிக்கின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

ஜே. வி. பி. யின் சுவரொட்டி

நாடாளுமன்றம் களஞ்சுகளின் குகையாக மாறிவிட்டது என்ற அர்த்தத்தில் ஜே. வி. பி. இயக்கத்தினர் கொழும்பிலும் வேறு இடங்களிலும் சுவரொட்டிகளை ஒட்டிவருகின்றனராம்.

நடந்து முடிந்த தேர்தலில் நடைபெற்றதாகச் சிலரால்

(12ஆம் பக்கம் பார்க்க)

விஜயவீராவின் பேரினவாதப் போக்கு

'லங்காதீப' பத்திரிகைக்கு விஜய வீர எழுதிய கடிதத்தின் சில பகுதிகள் வருமாறு:

ஈழத்தை வழங்குவதைவிட ஆபத்தான ஒரு நிலையை இன்று இந்திய இலங்கை ஒப்பந்தம் உருவாக்கியிருக்கிறது. ஈழம் கொடுக்கப்பட்டால், வடக்கும் கிழக்கும் சேர்ந்து இலங்கையின் முன்நிலைமை பகுதி பறிபோகும். இப்பொழுது இந்திய ஏகாதிபத்திய வாதிகள் முன்நிலைமை பகுதியை தங்கள் ஆட்சிக்குக் கீழ் கொண்டு வந்ததோடல்லாமல், ஈ. பி. ஆர். எல். எவ். ராணுவத்தை உருவாக்குவதன்மூலம் முழு இலங்கையிலுமே எதிர்காலத்தில் கண்வைத்திருக்கின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

கொல்வின் காலமானார்

முதுபெரும் அரசியல்வாதியும், இடதுசாரி அரசியல் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரும் வரலாற்றுத்துறை அறிஞருமான கொல்வின் 27.2.89 திங்கட்கிழமை தனது 82 வயதில் காலமானார்

1.3.89 புதன்கிழமை இவரது பூதவுடல் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 2.3.89 வியாழன் சுமக்கிரியைகள் இடம்பெற்றன. (இவரது நினைவாக வெளிவரும் கட்டுரையை 11 ஆம் பக்கம் பார்க்கவும்.)

விளக்குமாறும் பியோனும்

புதிய விளக்குமாறுகள் நன்றாகக் கூட்டும். எல்லோருக்கும் தொந்தரவே.

அதே போன்று, சூரியனுக்குக் கீழே, புதியவை எதுவும் நிகழ்வதில்லை என்ற ஆங்கில்ப் பழமொழியை இங்கு நினைவு கூர்வது நல்லது.

இச் சூழ்நிலையில், ஜனாதிபதி பிரேமதாசா யாரை தனது பிரதமராக நியமிப்பார்? முதலியாரையா, காமினியையா, பெஸ்டஸ்சையா, விஜேதுங்காவையா, எம். ஜி. ஆர். பாணி காமினி பொன்சேகாவையா?

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது முன்னைநாள் பிரதமர் திரு ஆர். பிரேமதாசா, தான் ஓர் 'பியோன்' கவிருந்ததாகக் கூறினார்.

புதிய ஜனாதிபதியின் புதிய 'பியோன்' யார் என்பது அடுத்த சில தினங்களில் தெரியும்.

திசைமுகம்

''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''

எழுத்துச் சுதந்திரம்

'வழி நடத்தப்படும் பத்திரிகைச் சுதந்திரம்' பற்றி சென்ற வாரத் 'திசை' இதழில் (25-2-89) வெளிவந்த செய்தியை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் உன்னதலட்சியங்களைப் பறைசாற்றிய பிரெஞ்சுப் புரட்சியின் 200 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இக்காலகட்டத்தில், எத்தனையோ எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டார்கள், தாக்கப்பட்டார்கள், தண்டனைக்குள்ளானார்கள் என்பது, இன்று சுதந்திரத்துக்கும் அதன் வழிவரும் ஜனநாயகத்துக்கும் உலகெங்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலையே காட்டுகிறது.

எங்கு இந்த அடிப்படைச் சுதந்திர ஊற்றுக்கண் மறுக்கப்படுகிறதோ அங்கே மக்களுக்கும் அவர்களை ஆள்வோருக்கும் இடையே பிக்கல்கள் உருவாகியுள்ளன என்பது தெளிவு. இந்தப் பிக்கல்களை அம்பலப்படுத்தி, தார்மீக ஆட்சி நிலவ போராடத் தூண்டுபவர்கள் பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் என்பதால் அவர்களுக்குத் தடை, தண்டனை, சாகடிப்பு !

எழுத்துக்கு அத்தனை ஆற்றல் !

ஒரு நாட்டை அழிக்கவும் ஆக்கவும் கூடிய வலு எழுத்தாளனுக்கு உண்டு !

அப்படியானால் அத்தகைய ஆற்றலைத் தன் பிறப்புரிமையாகக் கொண்டுள்ள எழுத்தாளனே, பத்திரிகையாளனே அதே நேரத்தில் தன்னளவில் மிகுந்த பொறுப்புடையவனாகவும் தன்னைச் சுயவிசாரணைக்குட்படுத்துபவனாகவும் இருக்க வேண்டும்.

அநியாயத்துக்கும் அறியாமைக்கும் எதிராகப் போராடும் பின்விற்காமல் இருக்கும் அதே நேரத்தில், மலிந்த பிரபலயத்துக்காக, பத்திரிகை விற்னைக்காக குறுகிய ஆதாயத்துக்காக கண்டதையும் எழுதி, நாட்டையும் மக்களையும் அவலத்துக்குள் மாட்டிவிட்டு, தானும் அதற்குள் சிக்குண்டு மூச்சுத் திணறக் கூடாது.

தனது தேசம், சுமூலை நன்கறிந்து, தனது மக்களின் முன்னேற்றத்துக்கு எது தேவைப்படுகிறதோ, அதை எழுதுவதே அவனது அப்போதைய தேவையும் சுதந்திரமுமாகும்.

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

நந்தி : 'சற்வியூ'
ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளி நாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 200/-
அரைவருடம்-ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

இலக்கிய கர்த்தாவை நாம் கொலைசெய்ய வேண்டாம்!

கனம் ஆசிரியருக்கு

கல்மான் குஷ்டி என்ற எழுத்தாளனைக் கொலைசெய்ய, மூன்று மில்லியன் அமெரிக்க டொலர் பரிசு! இதை அறிவித்திருப்பவர் ஈரான் தலைவர் அயத்துல்லா கொமெய்னி. பணத்திற்காக குஷ்டியைக் கொலை செய்யப் பலர் முன் வரலாம். ஆனால் வரலாறு கொமெய்னியை மன்னிக்காது.

குஷ்டியின் நாவல்களைப் படிக்கும் உலகின் கோடிக்கணக்கான வாசகர்களும் சீரிய சிந்தனையாளர்களும் கொமெய்னியை நோக்கி எய்துகொண்டிருக்கும் கேள்விக் கணைகள் அவரை அணுஅணுவாகக் கொல்லும்.

குஷ்டியின் 'சாத்தானின் செய்யுள்கள்' என்ற நூலில் முஸ்லிம்களை இழிவு செய்வதாக, ஆசிரியர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதில், பண்பாட்டின் சிகரமென தம்மைப் பற்றி கூறிக் கொள்ளும் இந்தியாவும் சேர்ந்து கொண்டதுதான் விந்தையானது. நூலை ஆய்ந்தறிந்து பாராமல் குஷ்டியைக் குற்றவாளியாகக் கண்டுவிட்டது இந்தியா.

ஆசிரியர் ஒரு கட்டுரையை எழுதி, நேரடியாகவே முஸ்லிம்களை இழிவுசெய்யவில்லை.

சலமான் குஷ்டி இந்தியாவில் பிறந்து, இங்கிலாந்தில் குடியேறிய ஒரு முஸ்லிம்மகன்.

மதத்தின் பேரால் உலகில் எத்தனையோ குளறுபடிகள் நடக்கின்றன. அவற்றைக் கண்டிப்பதற்கு ஒருவனுக்கு உரிமையில்லையா? அவற்றைக் கிண்டல் செய்தாலும் கூட மக்கள் திருந்துவதற்கான வாய்ப்பையளிக்கும் ஆசிரியரை நாம் பாராட்ட வேண்டும். பதிலாக நாம் அவரைக் கொலை செய்யக்கூட நிற்கிறோம்.

ஒரு சிந்தனையாளனை—சிருஷ்டி கர்த்தாவை— சிந்திக்கத் தெரியாத பலர் சேர்ந்து, ஒழித்துக் கட்டிவிட நேர்ந்தால், அவர் சுருத்துக்களை புரிந்து கொள்ளும் காலம் வரும் போது, நாம் வருந்த நேரிடும்.

சோக்ரெதர், யேசுநாதர், காந்திஜி போன்றோர் எடுத்துக்காட்டு.

எனவே, ஒரு புகழ்பெற்ற —பெருமதி மிக்க— இலக்கிய கர்த்தாவை நாம் கொலை செய்ய வேண்டாம்! அவரை வாழவிடுங்கள்!!

— வேரற்கேணியன்
யாழ்ப்பாணம்.

அஞ்சுகம்

இசை
ஆசிரியர் அவர்கட்கு!

அரசியல் அறிவில் நிறைந்த தவளைகளாக இருந்த எமக்கு சகல அறிவினையும் வாரி வழங்கும் 'இசை' க்கு எழுதுவதில் பெருமைப்படுகின்றேன்.

கடந்த ஆறு முகங்களிலும் வெளிவந்த 'உருளும் உலகில்' என்னும் பகுதியில் 'சர்வதேசி' யின் ஆக்கங்கள் எம்மை மிகவும் கவர்ந்தன. ஆனால் கடந்த ஏழாவது முகத்தில் 'உருளும் உலகில்' பகுதி இல்லாதது எம்மை ஏமாற்றத்தில் ஆழ்த்தியது.

தி. நவிவி
அச்சுக்கூட வீதி,
கொக்குவில்.

ஆசிரியர்
இசை

நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள இ. தொ. கா. வின் மூன்று உறுப்பினர்களும் அமைச்சர்களானமைக்குத் தமது அரசியல் சாணக்கியமே காரணம் என்றும், வடமேற்கில் 22 தமிழ் பிரதிநிதிகள் தெரிவாகியும் அமைச்சர் பதவி பெருதமைக்கு அரசியல் விவேகம் போதாமையே காரணம் என்றும் தொண்டமான் கூறியுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றியபடியே, அவர்களின் தோள்களில் நின்று தனதும், தன்னைச் சார்ந்த வியாபாரிகளினதும் நலன்களை மட்டும் பேணிவரும் தொண்டமானால் இப்படித்தான் சொல்ல முடியும். இவர் அடிபணிந்து பெறும் பதவிகளினால் தோட்டத் தொழிலாளர்களுக்கு, கடந்த காலங்களிலும் நன்மையேதும் கிட்டவில்லை. இருப்பிடவசதி, கல்வி வசதி, மாதச் சம்பளம், இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு, ஏன் உயிர்வாழும் பாதுகாப்பு கூட அவர்களிற்கு இல்லையே! யு. என். பி. அரசாங்கம் உண்மையில் இ. தொ. காவை எப்படி நோக்குகிறது என்பதற்கு, 1983 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது ஹட்டனில் நடந்த கூட்டமொன்றில், காமினி திசாநாயக்கா கூறியதை, அவருக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன். "நாயுண்ணியானது நாய் மீது அமர்ந்து கொண்டு அதன் ரத்தத்தைக் குடிக்கிறது. ஆனால் அது என்னவோ தன்னால்தான் நாய் வாழ்கிறது என நினைத்துக் கொள்கிறது. இந்த நாயுண்ணியைப் போன்றுதான் இ. தொ. கா. லும்."

க. இராசு
இருகோணமலை வீதி, கண்டி.

தேசிய இணக்க அரசு...! அந்தரங்கம் என்ன?

மீண்டும் தேசிய இணக்க அரசாங்கம் அமைப்பது பற்றிய பேச்சுகள் அடிபடத் தொடங்கியுள்ளன.

இந்த தேசிய இணக்க அரசு (National Consensus Government) பற்றிய பிரஸ்தாபம், தந்திரமாக வர்க்க நலனைக் காப்பாற்றும் பழைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவாலேயே இலங்கை அரசியலில் முதன் முதலில் புகுத்தப்பட்டது. ஜே. ஆர். இக்கருத்தை 1970ல் முன்வைத்தார்.

அவரை இப்படி சிந்திக்க வைத்தது எது?

1970ல் ஐக்கிய இடதுசாரி முன்னணி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் 2/3 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றது. ஜே. ஆர். ஐ உஷார் படுத்தியது.

அவர் ஏற்கனவே 1956ல் பண்டாரநாயக்காவின் கட்சி வெற்றி பெற்றபோது, இதே விதமான அனுபவச் சூடு பெற்றவர்.

1956 ல் இலங்கையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்த தற்பொழுதைய பேராசிரியர் றிச்சின்ஸ் (Howard Wriggins) ஐ. தே. க. 8 ஆசனங்களை எடுத்தாலே அது ஆச்சரியமானதாகும் என்று அன்று அறிவித்தார். ஆனால் அரசாங்கத்தின் ஊதுகுழலான டெய்லி நியூஸ் பத்திரிகையும் ஐ.தே.க. வைச் சார்ந்தவர்களும் அமெரிக்காவைச் சேர்ந்த சிலருக்கு இலங்கை அரசியலைப்பற்றி என்ன தெரியும் என எண்ணி நகைத்தனர். ஆனால் றிச்சின்ஸ் இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் திரிந்து அதன் நாடி நரம்பை பிடித்துப்பார்த்தவர் என்பது டெய்லி நியூஸ் காரருக்குப் புரியவில்லை.

1956 ஆம் ஆண்டு அரசியல் கணிப்பீடுகளே மனதிற் கொண்ட ஜே. ஆர். 1970இல் சிறிமா வெற்றி பெற்றபொழுது, தேசிய அரசாங்கம் என்ற கருத்தை முன்வைத்தார்.

இதனால் ஐ. தே. காவின் அன்றைய தலைவர் டட்லி சேனநாயக்காவுக்கும் ஜே. ஆருக்குமிடையில் 'லடாய்' ஏற்பட்டு நீதிமன்றத்திற்குச் செல்லுமளவிற்கு வளர்ந்தது.

வழக்காடு காதை தொடங்க முன்னர், டட்லி இயற்கை மரணம் எய்கிறார்.

வாழி! போய் வருக, இனிய இளவரசரே என்று செக்ஸ்பியர் நாடகப்பாணியில், இறந்த டட்லியை மறு உலகத்திற்கு வழி அனுப்பிவைத்தார் ஜே. ஆர்.

ஜே. ஆர். முன்வைத்த 'தேசிய அரசு என்ற எண்ணக் கரு பிரேமதாசாவின் ஆட்சியில் மீண்டும் தலைதூக்கியுள்ளது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் நல்ல அடிவாங்கிய சுதந்திரக் கட்சி, ஜே. ஆர். புகுத்திய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையால் தனக்குக கிடைத்த வாக்கு வீதத்தினேயும்விட (33 வீதம்) கூடுதலான ஆசனங்களை நாடாளுமன்றத்தில் பெற்றிருக்கின்றது.

வடக்கிலும், தெற்கிலும் ஒரே வேளையில் தீவிரவாதிகளுடன் சமர் செய்த பிரேமதாசா அரசினால் முடியாது.

இதனால்தான் 'அமைதிப் படையே வெளியேறு' என்ற கோஷங்களும் இப்போ மறைந்து வருகின்றன.

ஜே. ஆரைப் போன்று இப்போ பிரேமாவும் விரும்புவது, வட, தெற்கு தீவிரவாதிகள் ஆயுதங்களை கீழே போட்டு தன்னிடம் சரணடைவதையே.

இது நடைமுறைச் சாத்தியமில்லை என்பது எல்லோர்க்கும் தெரிந்ததே.

பேச்சுவார்த்தைகளுக்கு வாருங்கள் எனப் பிரேமாவினால் அழைக்கப்பட்ட தமிழ் தீவிரவாதிகளுக்கு, ஆயுதங்களை ஒப்படைக்கச் சொல்லி, ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆயுதங்களை ஒப்படைக்கச் சொல்லி, ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

கேட்பதன் மர்மம் என்ன?

இதன் பின்னணி என்ன?

பெரிய அரசியல் தந்திரம் இதில் உள்ளடங்கி இருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியென்றாலென்ன, சுதந்திரக்கட்சி என்றாலென்ன, சிங்கள தீவிரவாதிகளோ, தமிழத் தீவிரவாதிகளோ பதவிக்கு வரவிடக்கூடாது என்ற அவர்களின் பாரம்பரிய அரசியல் பின்னணியிலேயே இது பார்க்கப்படவேண்டும்.

தமது வர்க்க ஆட்சிக்கு உலை வைக்கக்கூடியவர்களை ஆசனத்தில் அமர்த்த இடமளிப்பதற்கு அவர்களுக்கு என்ன 'விசரா'?

இந்த நிலையில், அவர்களுக்கு அரசுக்க அமைவதற்கு தேசிய இணக்க அரசு வேண்டும்.

இது கைக்கூடினால் பெரும்பான்மை சிங்கள ஐ. தே. க. வும், ச. க. வும் இணைந்து தீவிரவாதிகளுக்கு எதிராக அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விடுவது இலகு.

எனவே தேசிய இணக்க அரசு யாருக்கு, எதற்காக வேண்டும் என்பது தெளிவாகும். 'ஐம்பான்கள்' எனப்படும் உதிரி வர்க்கத்தினரே இதனால் பயனடைவர்.

அதே நேரத்தில் இதை மறுகோணத்தில் இருந்து பார்த்தால், சர்வதேச ரீதியில் — குறிப்பாக இடதுசாரித்தன்மைக்கு எதிரான நாடுகளிடமிருந்து — இதற்கு ஆதரவு கிடைத்தாலும் உள்நாட்டில் இது ஜே. வி. பியினரின் கையை ஓங்கச்செய்யும். காரணம், இந்தத் தேசிய அரசாங்கக்கூட்டு, வலதுசாரிகளோ ஒருபுறமாகவும் அதற்கெதிராளவர்களோ ஜே. வி. பி. வர்க்கமாகவும் அணிதிரள வைக்கும் என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக சுதந்திரக்கட்சியின் தீமைப்பலன் அனைத்தும் ஜே.வி.பியின் பக்கம் சாரும்.

இந்நிலையில் ஜனாதிபதி பிரேமதாசா எதை எதை ஒழிப்பதற்கு இந்த நிட்டத்தை கையாள்கிறாரோ அவையே மீண்டும் பலம் கொண்டு அவர் ஆட்சிக்கு எதிராகத் தலையெடுக்க வழிவகுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. □

ராஜன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விவசாயத் தொழிற்றுறை விரிவாக்கம்

இரா. சிவச்சந்திரன்

விவசாயத் தொழிற்றுறை எனும்போது, அது ஒரு பக்கத்தில் விவசாய உற்பத்திக்கான (உள்ளீடுகள், வாகனப்போக்குவரத்து,களஞ்சியம் போன்றன) கைத்தொழில்களையும் மறுபக்கத்தில் விவசாய உற்பத்திகளை மூலப்பொருளாகக் கொண்ட கைத்தொழில்களையும் குறிக்கும். இக்கட்டுரையில் விவசாய உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரம் நீண்டகால பாரம்பரியமிக்க விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. ஆயினும் ஒரு விவசாயத் தொழிற்றுறை நோக்கிய விரிவாக்கம் இங்கு குறிப்பிடும்படியாக அபிவிருத்தியுறவில்லை என லாம். அதாவது, விவசாய மூலவளமானது அதிக வருமானம் தரத்தக்க விவசாய அடிப்படையிலான கைத்தொழில்துறை நோக்கி இன்றுவரை சரியாகத் நிகழாதிருப்பப்படவில்லை என்பதே இதன் கருத்தாகும். இலங்கையில் நூற்றுண்டிற்கு மேற்பட்ட வளர்ச்சியைக் கண்ட பெருந்தோட்ட விவசாயத்துறை கூட பண்ட உற்பத்திக் கட்டத்திலிருந்து பதனிடல் கட்டத்திற்குக் கூட இங்கு முறையாக அபிவிருத்தி பெறவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

அரிசி ஆலைகள்

இப் பிரதேசத்தில் அதிகம் பரந்துள்ள விவசாயக் கைத்தொழில் நெல்லரைக்கும் ஆலைத் தொழிலாகும். பாரம்பரியவகை ஆலை, ஓரளவு நவீன வகை ஆலை, நவீனவகை ஆலை என இவை நிராமம் தொட்டு நகரம் வரை பரந்துள்ளன. மொத்த நெல் ஆலைகளில் 80 வீதமானவை பாரம்பரிய ஆலைகளே. நெல்லை அரிசியாக மாற்றும் ஒரு சிறு பதனிடல் முயற்சியை மேற்கொள்ளும் இப் பாரம்பரிய ஆலைகள் அதிக தீமையையே விளைவிக்கின்றன. அவையாவன: (1) அரிசி அதிகளவுக்கு உடைக்கப்படுகின்றது. (2) அரிசியில் அசுத்தங்கள் காணப்படும் வாய்ப்பு அதிகம் உள. (3) சரியாக நீக்கப்படுவது இல்லை. (4) புழுங்கல் அரிசியை மட்டும்மே இவை அரைக்கின்றன, ஆலையை இயக்கும் வலுநுகர்வில் சிக்கனம் இல்லை.

நவீன வகை ஆலைகள் மேற்படி குறைகளை நிவர்த்திக்க வல்லன. எனவே இங்கு நெல்லரைக்கும் ஆலைகள் நவீனமயப்படுத்துதல் அவசியமாகும். தமிழர் பாரம்பரியப் பிரதேசமாகிய வடகிழக்கு மாகாணத்தில் நெல் 156692 ஹெக்டர் பரப்பில் (1984—85) விளைவிக்கப்படுகின்றது. இது இலங்கையின் மொத்த நெல்விளை பரப்பில் 31.3 வீதமாகும். (மொத்தம் 100 எனில் 68 வீதம் கிழக்கு மாகாணம். 32 வீதம் வடமாகாணம்) இதனால் நெல் லரைக்கும் ஆலைகளை எல்வகை யிலே விரைவாக நவீனமயப் படுத்தலாம் என்பது பற்றி நாம் அதிக கவனமெடுத்தல் வேண்டும்.

அரிசியை எவ்வாறு அதிக லாபம் தரும் கைத்தொழிலாக மாற்றலாம் என்பதற்கு 'நெறில்ஸ்' உற்பத்திகளாக வரும் நெஸ்டம் (Nestum), பாளிள் (Farline) ஆகிய குழந்தைப் உணவுப் பொருட்களை நகுந்த எடுத்துக்காட்டுகளாகும். மேற்படி உணவுப் பொருட்களில் இரு கைப்பிடியளவான அரிசியோ, கோதுமை யோதான் மூலப்பொருளாக உள்ளது. அத்துடன் சில ஊட்டச் சத்துகள் சேர்க்கப்பட்டுள்ளன. அதனைப் பெறுவதற்கு மிக அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது. இவ் அதிக விலையை அப்பொருள் பெறுவதற்கு அது கைத்தொழில்மயப் படுத்தப்பட்டு பல செயல் முறைக்குட்படுத்தப்பட்டு உற்பதிச் செய்யப்படுவதே காரணமாக அமைகின்றது. எனவே, விவசாய உற்பத்திகளைக் கைத்தொழில் மயப்படுத்தும்போது நாம் அதிக வருமானம் பெற முடியும்.

தெங்குத் தொழில்

தெங்குத் தொழில் ஒப்பீட்டளவில் கைத்தொழில் மயமாக்கப்பட்டுள்ளது எனலாம். தேங்காய்த் துருவல், தேங்காய் எண்ணெய்,சவர்க்காரம், மாஜரின், விளுகிரி போன்ற உற்பத்திகளும்தும்புத்தொழில் போன்ற தொழில் மயமாக்கப்பட்ட உற்பத்திகளும்தேசிய மட்டத்திலே ஓரளவு அபிவிருத்தியை எய்தியுள்ளன. ஆனால் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இவை குறிப்பிடும்படியான அபிவிருத்தியை இன்னும் எட்டவில்லை. தெங்குத் தொழில் அபிவிருத்திக்கான நிறை வாய்ப்புகள் இங்குள. தெங்குத் தொழில் அபிவிருத்தியானது நிராம மட்டங்களிலே இடம்பெறுவதால் அதிக பயனை விளைவிக்கத் தக்கவை. முக்கியமாக நிராம மட்டத்தில் பலருக்கு வேலை வாய்ப்புகளை அளிக்க முடியும். தெங்கினைத் தொழில் மயப்படுத்துவதோடு அதனை நவீன முறைக் கைத்தொழில் உற்பத்திகளாக மாற்றுதலும் அவசியமாகும்.

சீனி உற்பத்தி

இப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யத் தக்க இன்னோர் முக்கிய விவசாய அடிப்படையிலான தொழிற்றுறை சீனி உற்பத்தியாகும். கரும்பு, சில கிழங்கு வகைகள், பனை ஆகிய வளங்களிலிருந்து சீனி உற்பத்தி செய்யப்படலாம். இப் பிரதேசத்தில் தற்போது கந்தளாய். கல்லோயாவில் கரும்புச் சீனி உற்பத்தியாகின்றது. தேசிய மீட்டட்தில் வருடம் 3,00,000 தொன் சீனி நுகரப்படுகின்றது. இதில் 15,000 தொன்தான் உள்நாட்டில் உற்பத்தியாகின்றது. வறண்ட வலயத்தில் கரும்புச் செய்கையினை நல்ல முறையில் மேற்கொள்ளலாம். பாசன வசதிகள் அமைக்கப் பெற்றால் வருடம் முழுவதும் கரும்பு பயிரிடப்படலாம். அத்துடன் இப் பிரதேசத்தில் சீனி உற்பத்திக்கான பொருத்தமான கிழங்குகளுக்குக் கொடுத்து முட்டையாக, இறைச்சியாக நுகர்வதில் அதிக பயன் உண்டு. புல்லும் நினைவகைகளுமே மேற்படி உற்பத்திகளின் விவசாய மூலவளங்களாகும். ஆடு, எருமை, பன்றி, முயல், இறைச்சிக்கான மாடு போன்றனவும் நல்ல முறையிலே எமது பிரதேசங்களில் விரிவாக்கம் செய்யப்படலாம். நிராமம் ஒன்றில் மந்தித வளர்ப்பில் ஈடுபடும் ஒரு நவீன விவசாயி அதன் மூலம் பல நன்மைகளைப் பெறலாம். அவர் தனது வயல்களில் சீனியை உற்பத்தி செய்தல் நல்ல பயனை உண்டாக்கும். மேலும் இப் பிரதேசத்தின் முக்கிய பாரம்பரிய வளமான பனை வளத்தைச் சீனி உற்பத்திக்குப் பயன்படுத்துவோமாயின் அதிக வருமானமும் வேலை வாய்ப்பும் ஏற்படுமெனக் கருதுகின்றனர். பனஞ்சீனி உற்பத்தியானது அதிக உற்பத்திச் செலவை வேண்டுகின்றது. முக்கியமாக எரிபொருட் செலவே அதிகமாக உள்ளது. சூரிய சக்தியைப் பயன்படுத்துவதன்மூலம் இச் செலவைக் குறைக்க முடியுமாயின் உற்பத்திச் செலவு குறைந்து பனை வளத்திலிருந்து இலாபகரமான முறையில் சீனியை உற்பத்தி செய்தல் சாத்தியமே. சீனி உற்பத்தியுடன் , இணைவாக மதுபான உற்பத்தியும் அதிகரிக்கப்படலாம். குறிப்பாக சாராய உற்பத்தியை அதிகரிக்கலாம். இவை ஏற்றுமதி செய்யத் தக்க வகையில் தரம் வாய்ந்தனவாக அமைதல் வேண்டும். பனை வள அபிவிருத்திச் சபை போன்ற அமைப்புக்களும், சமூக நலன் விரும்பிகள் சிலரும் பனைவள உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கு அண்மைக் காலங்களில் அதிக முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டு வருகின்றனர். பனை வளத்திலிருந்து பல வகையான அழகுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உல்லாசப் பயணத் தொழில் வளரும்போது இவ் வாறான உற்பத்திகள் அதிக வருமானத்தை ஈட்டித் தருமென நம்பலாம்.

விலங்கு வேளாண்மை

எமது பிரதேசத்தில் அதிகளவு அபிவிருத்தி வாய்ப்பைக் கொண்ட இன்னோர் தொழிற்றுறை விலங்கு வேளாண்மை யாகும். வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நல்ல முறையில் திட்டமிட்டு இவை மேற்கொள்ளப்படலாம். புல்வளர்த்து அதனை விலங்குகளுக்குக் கொடுத்து பாலாக, இறைச்சியாகப் பெறுவதில் அதிக வருமானம் உண்டு. நினைவகைகளைக் கோழி வகைகள் எவையென ஆராய்ந்தறிந்து அவற்றினைப் பயிரிட்டு சீனி உற்பத்தியை அதிகரிக்க முடியும். மேலும் இப் பிரதேசத்தின் முக்கிய பாரம்பரிய வளமான பனை வளத்தைச் சீனி உற்பத்திக்குப் பயன்படுத்துவோமாயின் அதிக வருமானமும் வேலை வாய்ப்பும் ஏற்படுமெனக் கருதுகின்றனர். பனஞ்சீனி உற்பத்தியானது அதிக உற்பத்திச் செலவை வேண்டுகின்றது. முக்கியமாக எரிபொருட் செலவே அதிகமாக உள்ளது. சூரிய சக்தியைப் பயன்படுத்துவதன்மூலம் இச் செலவைக் குறைக்க முடியுமாயின் உற்பத்திச் செலவு குறைந்து பனை வளத்திலிருந்து இலாபகரமான முறையில் சீனியை உற்பத்தி செய்தல் சாத்தியமே. சீனி உற்பத்தியுடன் , இணைவாக மதுபான உற்பத்தியும் அதிகரிக்கப்படலாம். குறிப்பாக சாராய உற்பத்தியை அதிகரிக்கலாம். இவை ஏற்றுமதி செய்யத் தக்க வகையில் தரம் வாய்ந்தனவாக அமைதல் வேண்டும். பனை வள அபிவிருத்திச் சபை போன்ற அமைப்புக்களும், சமூக நலன் விரும்பிகள் சிலரும் பனைவள உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கு அண்மைக் காலங்களில் அதிக முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டு வருகின்றனர். பனை வளத்திலிருந்து பல வகையான அழகுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உல்லாசப் பயணத் தொழில் வளரும்போது இவ் வாறான உற்பத்திகள் அதிக வருமானத்தை ஈட்டித் தருமென நம்பலாம்.

விலங்கு வேளாண்மை

எமது பிரதேசத்தில் அதிகளவு அபிவிருத்தி வாய்ப்பைக் கொண்ட இன்னோர் தொழிற்றுறை விலங்கு வேளாண்மை யாகும். வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நல்ல முறையில் திட்டமிட்டு இவை மேற்கொள்ளப்படலாம். புல்வளர்த்து அதனை விலங்குகளுக்குக் கொடுத்து பாலாக, இறைச்சியாகப் பெறுவதில் அதிக வருமானம் உண்டு. நினைவகைகளைக் கோழி வளர்த்தல் அவற்றினைப் பயிரிட்டுத் தேவைக்கான உயிர் வாயுவை (Biogas) உற்பத்தி செய்யலாம். பயிர்களுக்கு உரம் பெறலாம். பால், இறைச்சி பெறலாம். இப்படி ஒன்றுடன் ஒன்று இணைவாக அபிவிருத்தியுறத்தக்க வகையில் ஒருங்கிணைக்கப்பட்ட நிராமப் பண்ணைத் திட்டவிருத்தியின் மூலம் அதிக பயன் பெறமுடியும். இதற்கு சிறந்த உதாரணம் மன்னாரில் அமைந்துள்ள 'ஸ்கந்த பாம்' ஆகும். தனி நபர் ஒருவரின் மேற்படி ஒருங்கிணைப்புப் பண்ணை அபிவிருத்தியானது பலருக்கு வழிகாட்டவல்லது. விலங்கு வேளாண்மை எமது பிரதேசத்தில் இன்றுவரை மிகவும் குறைந்த கவனிப்பையே பெற்றுள்ளது. இதனை ஒவ்வொரு நிராம மட்டத்திலும் அபிவிருத்தி செய்ய உறைத்தல் வேண்டும். வீட்டுக்கு ஒரு மாடு,சிறுகோழிப்பண்ணை, ஆடு என்பன வளர்க்க ஊக்கம் அளிக்கப்படுதல் வேண்டும். எமது நிராமங்களிலுள்ள வேலினை மதில்களாக மாற்றுவதை விடுத்து குழை தரக்கூடிய மரங்களை வேலிகளில் நாட்டி அதன் மூலம் விலங்கு வேளாண்மையை அதிகரிக்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு நிராமங்களிலும் சுயநிறைவுப் பொருளாதார வளமுள்ள நிராமக் குடும்ப அலகுகளை ஏற்படுத்துவதற்கு இவை பெரிதும் உதவும்.

பால் உற்பத்தியை இன்னும் நவீன தொழிற்றுறை உற்பத்தியாக மாற்ற வேண்டுமாயின் அதனை புட்டிப்பால், பால்மா, பட்டர், சீஸ், ஐஸ் கிறீம், யோக்ஹட் போன்றனவாக மாற்றி உற்பத்தி செய்யலாம். இவை அதிக வருமானத்தைத் அளிக்கவல்ல உற்பத்திகளாகும். புல் வளர்ப்பில் இருந்து ஆரம்பமாகும் இத் தொழிற்றுறையின் விரிவாக்கமானது சந்தையின் விரிவுக் கேற்ப அதிக வருமானம் தரும் உற்பத்திகளாக வளர்ச்சி பெறத் தக்கவையாகும்.

நவீன முறைகள்

வடகிழ் மாகாணத்திலே 6.1 வீத நிலப் பரப்பைக் கொண்டதும், அப் பிரதேச, மொத்தக் குடித்தொகையில் 36 வீதத்தை உள்ளடக்கியதுமான யாழ்ப்பாணக் குடாநாட்டுப்பகுதியே தோட்டச் செய்கை நன்கு வளர்ச்சியடைந்துள்ள பகுதியாக அமைந்துள்ளது. இப்பகுதியில் இலங்கையில் வேறு எப்பாகத்திலும் இல்லாத வாறு செறிந்த முறைப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இங்குள்ளோர் நவீன விவசாயிகள் என கூறத்தக்கவர்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகள்போல் நாட்டின் வேறு எங்கும் மிக விரைவாக நவீன அம்சங்களைப் பின்பற்றும் விவசாயிகளைக் காண்பதரிது. பாரம்பரிய முறையை உடனடியாக விட்டு நவீன முறையைப் பின்பற்றக்கூடிய மனப்பாங்கு இங்குள்ள பெரும்பாலான விவசாயிகளிடம் காணப்படுகின்றது. இதனால் நவீனத்துவ முறைகள் இங்கு புகுத்தலும் எளிதாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே உள்ள தோட்டங்களில் புகையிலை, மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு. காய்கறிகள், பழங்கள், நினைவகைகள் என்பன பெரும்களவில் விளைவிக்கப்படுகின்றன . இலங்கையின் உப உணவு உற்பத்தியில் கணிசமான பங்கினை யாழ். குடாநாட்டு விவசாயிகளே உற்பத்தி செய்கின்றனர். எடுத்துக்காட்டாக, இலங்கையில் வெங்காயச் செய்கைக்கு உட்பட்ட பரப்பளவில் 38 வீதமும், மிளகாய்ச் செய்கைப் பரப்பளவில் 15 வீதமும் யாழ் குடாநாட்டிற்குள் அடங்குகின்றது. எனவே இவ் உற்பத்திகளை விவசாய அடிப்படையிலான கைத்தொழில் உற்பத்திகளாக விரிவாக்கம் செய்வதுபற்றி நன்கு சிந்தித்து திட்டமிடுதல் இம் மண்ணை நேசிக்கும் அன்னவரினதும் கடமையாகும். எடுத்துக்காட்டாக புகையிலை மூலவளத்தைக் கொண்டு சுருட்டுக் கைத்தொழில் விரிவாக்கத்துடன் மாத்திரம் நின்றுவிடாது, அதனை நவீன முறையிலே கிரட் உற்பத்தியாக மாற்ற முடியும். இதற்கான நவீன இயந்திரங்களைத் தருவித்து, கிரட் புகையிலை உற்பத்தியையும் ஊக்குவித்து விவசாயத் தொழிற்றுறை விரிவாக்கம் செய்யப்படலாம்.

உணவு பதனிடல்

இப் பிரதேச விவசாய உற்பத்தியில் குறிப்பாக யாழ் குடாநாட்டு உற்பத்தியில் உணவு பதனிடல் தொழிற்றுறை நல்ல பயனை நல்குமெனலாம். இவற்றுள் முக்கியமாக பழங்கள்பதனிடல், தக்ரத்தினைத்தடல், காய்கறி பதனிடல் என்பனவற்றின் விரிவாக்கம் பற்றி அதிகம் சிந்திக்கலாம். சில பருவ காலங்களிலேயே சில பழங்களும், காய்கறிகளும் அதிகம் விளைகின்றன. அக்காலத்தில் இவற்றின் உற்பத்திகள் அதிக நிரம்பலை ஏற்படுத்துகின்றன. இதனால் அவற்றின் கேள்விக்குறைந்து பழங்கள், காய்கறிகள் பெருமளவு பழுதடையும் நிலையும் தோன்றுகின்றது. எனவே பழங்களையும், காய்கறிகளையும் பாதுகாப்பாக வைப்பதற்கும், நீண்ட நாட்களுக்கு இன்னோர் வழியில் காப்புச் செய்து வைத்து பயன்படுத்துவதற்கும் சிறப்பான சில தொழில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு நகரில் சேரிகள்

கொழும்பில் மோசமான பகுதிகளில் குறைந்த வருமானமுள்ள குடும்பங்கள் வாழும் வீடுகள் சேரிகள் என்றும் கொட்டில்கள் எனவும் குறிப்பிடப் படுகின்றன. கொழும்பு நகரில் உள்ள வீடுகளின் மொத்த தொகையில் சேரிகளில் விதிநாசாரம் மிக உயர்ந்ததாகும். நாடாந்தப் பட்டயவேலு ஆய்வுகளின்படி, நகரின் மொத்தக் குடிமனைத் தொகையில் 45-55 சதவீதமானோர் சேரிகளில் வசிக்கின்றனர். நாட்டின் ஏனைய சில பட்டினங்களிலும் சேரிகளிருப்பினும்கொழும்பு நகருடன் ஒப்பு நோக்குகையில் அவற்றின் விகிதாசாரம் குறைந்ததாகும்.

சேரிகள் பிரதானமாக இரு வகைப்படும். வாடகைச் சேரி வீடுகள், பழைய சேரிவீடுகள். சேரி வாடகைவீடுகளில் உப பிரிவுகள் உண்டு. வாடகை வீடுகள், வாடகைத் தோட்டங்கள், சேரி வாடகை வீடுகள் ஒன்றில் பின் ஒன்றாக அமைந்த இரு அறைகளைக் கொண்டவை. இவ்வீடுகள் நெருக்கமாக அமைந்து ஒடுங்கிய பாதையை முகப்பாகக் கொண்டுள்ளன. இவ்வீடுகள் பொதுவாக மலகூட தண்ணீர் வசதிகளோடு அமைந்து ஒரே குடும்பத்தவர்கள் வாழ்வதாக விளங்குகின்றன. தோட்டங்களில் அமைந்துள்ள வீடுகள் அநேகமாகத் தனியார் அறையைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு குடும்பம் வசிக்கிறது. இவை வரிசையாக அமைக்பட்டு சிலவிடங்களில் ஒரு விருந்தையையும் கொண்டுள்ளன. ஒவ்வொரு வரிசையிலும் ஏறத்தாழ பத்து வீடுகளும் பொதுவான மலகூடத் தண்ணீர் வசதியும் உள்ளன.இவை வழக்கமாக ஒரு துண்டில் கட்டப்பட்டு பொதுவான தோட்டம்ஒன்றையும் கொண்டிருப்பதால் தோட்டங்கள் என வழங்கப்படுகின்றன. இவ்வகைத் தோட்டங்கள் அளவில் பெரும்பாலும் வேறுபடுகின்றன. இவை 5 முதல் 100 வீடுகள் வரை கொண்ட வெவ்வேறு அளவுகளிற் காணப்படுகின்றன. இவ்வீடுவகை சேரி வீடுகளும் பெருந்தோட்டத்துறை வளர்தொடங்கிய காலத்தில் நகரத் தொழிலாளர்களின் வீட்டு வசதிக்காகக் கட்டப்பட்டவையாகும். பதனிடல், அடைத்தல், களஞ்சியப்படுத்தல், கப்பலில் ஏற்றுதல், முதலிய நடவடிக்கைகள் விரிவடைய விரிவடைய சேரி வீடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இச்சேரி வீடுகள், நகரத் தொழிலாளர்களுக்கான வீடுகளைக் கட்டுதல் இலாபகரமான தொழிலாக இருந்த காலத்தில், வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டமும் நகரசபை விடமைப்பு உப விதிகளும் அறிமுப்படுத்தப் பட முன்கட்டப்பட்டன. இவ் வீடுகள் பெரும்பாலும் வர்த்தகக் கைத்தொழில் நடவடிக்கைகள் பெருமளவில் மேற்கொள்ளப்படும் துறைமுகம், தொழிற்சாலைகள், களஞ்சியங்கள் போன்றவற்றுக்கு அண்மையிலேயே அமைக்கப்பட்டன. வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் அமுல் செய்யப்பட்டதும் இவ்வீடுகளைப் பராமரிப்பது இலாபகரமானதல்ல என்பதை வீட்டுச் சொந்தக்காரர்கள் கண்டனர். அதனைத் தொடர்ந்துவந்த ஆண்டுகளில் இவ்வாடகை வீடுகளில் இடநெருக்கடி, வசதிக் குறைவு கட்டடங்கள் பேணப்படாமை போன்றவை காரணமாக இவை துரிதமாக நலிவடையத்தொடங்கின.பழைய வாடகை வீடுகள் ஒரு காலத்தில் மத்திய வகுப்பினராலும் நகரின் உயர் வகுப்பினராலும் வாசஸ்தலங்களாக விளங்கியனவாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வர்த்தக வியாபார நடவடிக்கைகள் இவ் வீடுகள் அமைந்த பகுதிகளுக்கு விரிவடையவே வீட்டுச் சொந்தக்காரர்கள் இட நெருக்கடி குறைந்த பகுதிகளுக்குக் குடிபெயர்ந்து சென்றனர். பின்னர் இவ்வீடுகளிற் பல சேரி வீட்டுக் கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, நகரின் குறைந்த வருமானமுள்ள தொழிலாளர்களின் வீடுகளாக மாற்றப்பட்டுள்ளன. இக்கட்டிடங்களில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாகவும் கட்டிடங்கள் பழுதுபார்த்துப் பேணப்படாததனாலும் இவை சேரிக் குடிசைகளின் நிலைக்குத் தாழ்ந்துள்ளன.

சேரிவீடுகளிற் பெரும்பாலானவை, அவசரகால உபயோகத்துக்கு உதவாத தென்னோலை, மலிவான பலகை, பழைய தகரம் போன்ற பொருட்களால் அமைக்கப்பட்டவையாகும். சில ஓரளவு நிரந்தர வீடுகள் எனக்கூறத் தக்கவையாக அமைக்கப்பட்டுள்ளன. இவை நாட்டுப்புறங்களிலிருந்து நகரவசதிகளை நாடிவரும் அத்துமீறிக் குடியிருப்பவர்களால் அரசாங்க நகர சபைக் காணிகளிலும் தனியாருக்குச் சொந்தமான காணிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் குடியிருப்போருக்கு அங்கு விடைட்டவோ குடியிருக்கவோ எவ்வித உரிமையுமில்லை. பொதுவாக அவை தாழ்ந்த பிரதேசங்களில் உள்ள சதுப்பு நிலங்களாகும். இவற்றை இலாபகரமாக உபயோகிக்கவோ விற்கவோ முடியாது. நீர் பெறுவதற்காகவும் சாக்கடை வெளியேற்றுவதற்காகவும் பொதுவாகச் சேரிகள் ஆற்றங்கரைகள், வாய்க்கால் கரைக்கு அண்மையில் அமைக்கப்பட்டன. பகிரங்கக் குளியல் அறைகள், மலசலகூடங்கள் என்பவற்றுக்கு அருகாமையிலும் தற்காலிகக் கிணறுகள் அமைக்கக் கூடிய நீர்தேங்கி நிற்கும் இடங்களிலும் இவை அமைக்கப்பட்டன. சில இடங்களில் சேரித்தோட்டங்களும் சேரி வரிசைகளும் தனித்தனி நுழைவாயில்களுடன் காணப்படுகின்றன. சில குச்சு வீடுகள் கூட்டம் அல்லது சேரிகள் இவ்வகை வீடுகளையும் கொண்டனவாகும். இதற்குக் காரணம் புதிதாக மணமான சில பிள்ளைகள் ஒரே வாடகை வீட்டுத் தோட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட குச்சு வீடுகளுக்குக் குடிபெயர்ந்தமையாகும். தொடக்கத்தில் வெள்ளப் பெருக்கு முதலியவை காரணமாக வீடு இழந்தவர்களால் சேரிகள் அமைக்கப்பட்டன. ஆனால் சென்ற 40 ஆண்டுகளாக சேரிகள் துரிதமாகப் பெருகி வந்துள்ளன. இதற்குக் காரணம் சேரிகளின் குடிசனத் தொகை அதிகரிப்பு, நாட்டுப் புறங்களிலிருந்து நகருக்குக் குடிபெயர்தல் என்பனவாகும்.

கொழும்பு நகரின் எல்லா வட்டாரங்களிலும் குச்சு வீடுகளும் சேரிவீடுகளும் காணப்படுகின்றன. சேரிகள் அமைந்துள்ள முக்கிய வட்டாரங்கள் வர்த்தக நடவடிக்கைகள் மிக்கதான புறக்கோட்டை, கோட்டை, பஞ்சிகாவத்தை, அளுத்கடை மேற்கு, மெசஞ் சர்விறி, வாழைத்தோட்டம், வேக்கந்தை, உணுப்பிட்டி, கொச்சிக்கடைவடக்கு, தெற்குக் வட்டாரங்கள், பெரும்பான்மையான சேரிகளைக் கொண்ட வட்டாரங்கள் நகரின் வடக்குக் கிழக்கு எல்லைப்புறங்கள் மற்றும் மகாவத்தை, மட்டக்குளி, புளுமெண்டால், தெமெட்டகொடை, ஜுனுபொக்குற ஆகியவையாகும். சேரிகள், குச்சுவீடுகளில் குடிசன நெருக்கடி காணப்படுகிறது. அவற்றில் காற்றோட்ட வசதிகூட இல்லை. ஒரு வீட்டில் பல குடும்பங்கள் குடியிருக்கின்றன. சேரிகளின் பல குச்சுவீடுகளில் ஓர் அறையும் ஒரு வாசற் கதவும் மட்டுமே உள்ளன; யன்னல்கள் இல்லை. ஒரு வீட்டின் பரப்பளவு ஏறத்தாழ 150 சதுர அடியாகும். சுகாதார வசதிகள் மோசமான நிலையில் உள்ளன. போதியளவு நீர்; மலசலகூட வசதிகளில்லை. சேரிகளில் பொதுவாக 10 குடும்பங்களுக்கு ஒரு குழாய் வீதமே நீர் வசதியுக்கிறது. ஒரு பகிரங்கக் குளியலறையை சுமார் 20 குடும்பங்கள் பயன்படுத்துகின்றன. ஒரு மலகூடத்தை 8 குடும்பங்கள் உபயோகிக்கின்றன. குச்சு வீடுகளைப் பொறுத்தவரையில் சுமார் 50 குடும்பங்கள் பாதை ஓரத்திலுள்ள ஒரு நீர்க்குழாயையும் ஒரு பகிரங்க மலகூடத்தையும் பகிர்ந்து கொள்கின்றன. சில இடங்களில் 50 குடும்பங்களைக் கொண்ட ஒரு சேரியில்கூட ஒரு மலகூடமேனும் இல்லாத நிலை காணப்படுகிறது. பிந்திய காலத்தில் சில சேரிகளுக்கு நகரசபையினாலும் வேறு நிறுவனங்களாலும் பகிரங்க குளிக்குமிடங்களும் மலகூடங்களும் வழங்கப்பட்டன. எனினும், இவை போதியதன்று. சேரிகள், குச்சு வீடுகளின் சூழல் அசுத்தமானது; குழப்பமும் இரைச்சலும் நிறைந்தது. மலகூடங்கள் இல்லாத விடத்துச் சேரிகளில் வாழ்வோர், நெருக்கள் போன்ற திறந்த இடங்களை இத்தேவைக்காகப் பயன்படுத்துகின்றனர். மிக ஆபத்தானது யாதெனில் அக்கம் பக்கத்தில் கிடைக்கும் அசுத்த நீரையே அவர்கள்குடிப்பதற்கு பயன்படுத்துகின்றனர் என்பதாகும். பல சேரிகள் ஆற்றங்கரைகள் வாய்க்கால் கரைகள் தாழ்ந்த நிலம் என்பனவற்றில் அமைந்திருப்பதனாலும் அதில் குடியிருப்பவர்கள் ஈரலிப்பான நிலத்தில் வாழ்வதோடு அடிக்கடி வெள்ளப் பெருக்குக்கும்ஆளாகின்றனர். இக்குடிமக்களிடையே குறிப்பாக நீரால் பரவும் நோய்கள், சிசு மரணம், போசாக்கின்மை என்பன பரவலாகக் காணப்படுகின்றன.

சேரிகளிலும் குச்சு வீடுகளிலும் வசிக்கும் தொழிலாளர்களிற் பெரும்பாலானோர், வர்த்தக சேவைத்துறைகளில் பல்வேறுவகைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தொழில் செய்யும் நிறுவனங்கள் சேரிகளுக்கு அண்மையிலோ, இலேசாக வாகனங்களிற் சென்றடையக் கூடிய தூரத்திலோ அமைந்துள்ளன. சேரிகள், குடிசைகள் பெரும்பாலாகவுள்ள பகுதிகளில் பெண்கள், பிள்ளைகளும் பல் வேறு தொழில்களில் ஈடுபட்டு தம் ஜீவனும்சத்தைத் தேடிக் கொள்கின்றனர். இவர்கள் வேறிடங்களுக்கு மாற்றப்பட்டால் அவர்களின் தொழிலுக்குத் தடையேற்பட்டு பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படலாம். மறுபுறம், அவர்கள் இப்பொழுது வசிக்கும் நிலங்களின் தன்மை காரணமாக அவற்றில் நிரந்தரமான வீடுகள் அமைப்பது சாத்தியமானதல்ல. உதாரணமாகச் சதுப்பு நிலங்கள் வீடமைப்புக்குப் பொருத்தமானவையல்ல. இவற்றில் குப்பைகூழங்கள் கொட்டப்படுவதுடன் அடிக்கடி இவை வெள்ளத்திலும் ஆழ்ந்து விடுகின்றன. ஆற்றங்கரைகள், வாய்க்கால் கரைகள் குறித்த சில வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுவதால் அங்கு வீடமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளது. நீண்டகாலமாக சேரிகளில் வாழ்வோரிடையே வளர்ந்துள்ள கலாசாரப் பழக்க வழக்கங்கள் காரணமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையில் அமைக்கப்பட்ட வீடுகளில் வாழ்வதும் அவர்களுக்குக் கஷ்டமானதாகும். இத்தகைய வீடுகளை அவர்கள் விரைவிலேயே சேரிகளின் நிலைக்கு தாழ்த்தி விடுவர். இதற்கான சான்றுகள், இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சில அடுக்கு வீடுகளிற் காணப்படுகின்றன.

சேரி வாசிகளின் வீடமைப்புப் பிரச்சினை சிக்கலானதாகையால் வீடமைத்துக் கொடுப்போருக்கும் விடுகள் பெறுவோருக்கும் பயனளிக்கும் வகையில் அவை அமைக்கப்படவேண்டும். இவ்வம்சங்கள் மீது ஆழ்ந்த கவனஞ் செலுத்தப்பட வேண்டும். சிறந்த வீடமைப்பானது வேறு அம்சங்களிலும் நல்லபாதிப்பை ஏற்படுத்தும். சிறந்த குடிநிலைகளில் வீடுகள் அமைந்தால் பாடசாலை வசதிகள், குறைந்த சிகமரணம் போசாக்குக் குறைவின்மை, குறைந்த குற்றச் செயல்கள் என்பன போன்ற பயன்கள் ஏற்படும்.

நன்றி: பொருளியல் நோக்கு □

சிரியுங்கள்

தொகுப்பு: எஸ்.பி.கே.

"என்னுடைய பூனைக்குப் பேசக் தெரியும்"

"அப்படியா..... !"

"நான் அதனிடம், இரண்டிலிருந்து இரண்டைக் கழித்தால் எவ்வளவு என்று கேட்டேன், ஒன்றுமில்லை. என்றது"

O O

"பஸ் நெருக்கம் என்றும் சொல்லமாட்டேன், ஆனால் சாரதி கூட எழுந்து நின்றாரே"

O O

"நீ ஏன் சம்பள உயர்வு கேட்கிறாய்?

"எப்படியோ, மற்ற மனிதர்கள் மூன்று வேளை சாப்பிடுகிறார்கள் என்பதை எனது குடும்பம் கண்டுபிடித்து விட்டது ஐயா....."

O O

கோழி— பிறக்க முன்பும் பின்பும் மனிதனுக்கு உணவாகும் ஒரே பிராணி.

O O

"வேலை நேரத்தில் நீ தலை மயிர் வெட்டப் போனதேன்?"

"அது வேலை நேரத்திலும் வளருகிறது"

O O

அவர் நூறு மணிக்கூடுகளை வாங்கி விடு முழுவதும் மாட்டியிருந்தார், நேரம் பெறுமதி மிக்கது என்று கேள்விப்பட்டிருந்ததால்.

O O

"சமுத்திரத்தைக் கடந்த பஸ் எது?"

"கொலம்பஸ்" □

பெண் வியாபாரம்

ஜப்பானியர்களின் பெண் கொள்வனவு பற்றி 4-2-89 இசையில் வெளியான மொழி பெயர்ப்புக்கட்டுரையைவாசித்தபோது, அதுபற்றி மேலும் பல விபரங்களைத் தரவேண்டும்போல் தோன்றியது; அதன் விளைவே இக்கட்டுரை யாகும்.

ஜப்பானியர்களின் பெண் கொள்வனவு அடிமை வர்த்தகத்தை நினைவுறுத்துகின்றது; மனித நாகரிகத்தை மேலும் கேள்விக் குறிக்கு உள்ளாக்குகின்றது.

தென்கிழக்காசிய நாடுகளில் அமெரிக்க ஆதிக்கம் பெண் கொள்வனவுக்கான சூழலைத் தோற்றுவித்தது. அதனை ஜப்பான் தனக்குரிய பாணியில் இன்று பயன்படுத்தி வருகின்றது.

ஜப்பானியப் பண்பாட்டில் பெண் கொள்வனவு ஒரு புதிய விடயமல்ல. ஜப்பானியத் தனவந்தர்கள் ஜப்பானிய ஏழைக் குடும்பங்களிலிருந்து பெண்களைக் கொள்வனவு செய்து, தனக்குரிய போகப் பொருட்களாகப் பயன்படுத்தும் வழக்கம், நீண்டகாலமாக உள்ளது. இதற்கென, குறிக்த சந்தை முறைகளும் அங்கு இருந்துள்ளன. அநாவது ஏழைப் பெற்றோர் தமது இளம் பெண்பிள்ளைகளை இச் சந்தைகளுக்குக் கொண்டு வந்து இளமை, அழகு என்ப வற்றிற்கு ஏற்ப விலைகூறி, ஏலத்தில் விற்பனை செய்வர். ஆபிரிக்கக் கறுப்பின மக்களைச் சந்தையில் வைத்து வெள்ளையர் அடிமை வர்த்தகம் செய்த அதே மாதிரியே, ஏழை ஜப்பானியப் பெற்றோர், தமது பெண்பிள்ளைகளைத் தனவந்த ஜப்பானியர்களுக்கு நிரந்தரமாக விற்றுவந்தனர். இந்தத் தனவந்த ஜப்பானியர்கள் அவ்வாறு கொள்வனவு செய்யும் பெண்களை, தமது பாலியல் போகத்திற்காக இளமையை உறிஞ்சிக் குடித்த பின்பு, அவர்களைத் தமது வீட்டு வேலைகளிலும், ஏனைய உடலுழைப்பு வேலைகளிலும் ஈடுபடுத்தி வந்தனர்.

1930களில், வறுமையின் நிமித்தம் ஜப்பானியக் கிராமங்களில் பெண் வர்த்தகம் பெருகியது. இப் பெண் வர்த்தகத்தைத் தடுத்து நிறுத்துவதற்கென சில கலாசார இயக்கங்கள், அக்காலத்தில் அங்கு தோன்றி இருந்ததென்பதும், குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அன்று தமது தேசப் பெண்களைக் கொள்வனவு செய்த ஜப்பானிய தனவந்தர்கள் இன்று, முன்னேற்றம் குறைந்த தமது அண்டைய ஆசிய நாடுகளிலிருந்து பெண்களைக் கொள்வனவு செய்கின்றனர். இவற்றின் பின்னணியினைச் சற்று ஆழமாக நோக்குவோம்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின், அமெரிக்காவின்கீழ், தென்கிழக்காசிய நாடுகளில் பரவலாக ஒங்கத்தொடங்கியது. வியற்நாமிலும் பிலிப்பைன்சிலும் இருந்த அமெரிக்க இராணுவத் தளங்களிற்கும், பாலியலின் பொருட்டுத் தேவையான பெண்கள், ஏனைய தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டனர். பின்பு போதியளவு பெண்களைக் கொள்வனவு செய்யக் கூடிய நிலை, பிலிப்பைன்சுக்குள்ளேயே சாத்தியப்பட்டது, இது நிரந்தரக் கொள்வனவல்ல, தவணை அடிப்படையிலான கொள்வனவாகும். இராணுவத்தினரிற்கு மட்டும் பெறப்பட்ட நிலைமாறி, பின்பு அமெரிக்க உல்லாசப் பிரயாணிகளுக்கும் இவ்வாறே பெண்கள் விநியோகம் செய்யப்பட்டனர். இப்படியாக அமெரிக்கர்களின் காலபோகப் பெண் சந்தையாக, பிலிப்பைன்ஸ் மாறியது. மேலும், இங்கிருந்து வியசாரத் தேவைகளுக்கெனப் பெண்கள் அமெரிக்கா கொண்டுசெல்லப்படுதுடன், ஆபாசப் படங்கள் இலங்கையும் இதன் வரிசையில் இடம் பிடிக்கத் தொடங்கியது. ஆயினும் இது ஆரம்ப நிலையே.

இந்த மோசமான கலாசாரத் சீரழிவை ஏகாதிபத்திய அரசியலில் இருந்து நாம் பிரித்துப் பார்க்க முடியாது. தெ. கி ஆசிய நாடுகளில் அமெரிக்க ஆதிக்கம் வலுப் பெற்ற [சூழலில் இத்தகைய பாலியற் சுரண்டல் அமெரிக்கர்களினால் உருவாக்கி வளர்க்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் கூட்டு நாடுகளான ஆசியாவின் ஜப்பானும், இன்று வேலும் அமெரிக்காவினால் உருவாக்கப்பட்ட இத்தகைய சூழல் நமக்கேற்ப அறுவடை செய்கின்றன. எனவே இங்கு ஜப்பானிய பெண் கொள்வனவில் ஒரு ஏகாதிபத்திய பொதுத்தன்மையை நாம் இனங் காணத்தவறக்கூடாது. ந்த பட்ச விழிப்புணர்ச்சியினால் தூண்டப்பட்டு பாரம்பரிய ஜப்பானிய ஆணுக்கப் பிடியிலிருந்து ஜப்பானிய பெண்கள் ஓரளவிற்கு விடுபடுகின்றனர். பெண்களை இறக்குமதி செய்வதன் மூலம் ஜப்பானிய ஆண்கள் தமது சொந்தப் பெண்களிடம் தங்கியிருக்க வேண்டியவர்கள் அல்ல என்ற மனோ பாவத்தை வளர்க்க முடியும். இதனால் மேலும் [ஆணுக்கத்திற்கான வாய்ப்புகள் [அங்கு அதிகரிக்கும். உதாரணத்திற்கு ஒரு பகுதி தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி போராடும்போது இன்னொரு பகுதி தொழிலாளரை கொணர்ந்து வேலை செய்விப்பதனால் குறித்த தொழிலாளரின் கோரிக்கைகளை பலவீனப்படுத்த முடிவது போல இங்கு ஜப்பானிய பெண்களும் இறக்குமதியாகும் பெண்களின் மூலம் ஆணுக்கத்தை ஒறுக்க கொள்ளும் சூழலுக்குத் தள்ளப் படுகிறார்கள். எனவே இத்தகைய பெண் கொள்வனவு உள்ளும் புறமும் சமூக ரீதியில் பாதகமானதே.

பெண் கொள்வனவு செய்வதனால் ஜப்பானிய உள் நாட்டு சமூகச்சூழலில் எத்தகைய தாக்கத்தை விளைவிக்கும் என்பதை சற்று அவதானிப்போம். அங்குள்ள பெண்கள் மத்தியிலேற்படும் குறைந்த பட்ச விழிப்புணர்ச்சியினால் தூண்டப்பட்டு பாரம்பரிய ஜப்பானிய ஆணுக்கப் பிடியிலிருந்து ஜப்பானிய பெண்கள் ஓரளவிற்கு விடுபடுகின்றனர். பெண்களை இறக்குமதி செய்வதன் மூலம் ஜப்பானிய ஆண்கள் தமது சொந்தப் பெண்களிடம் தங்கியிருக்க வேண்டியவர்கள் அல்ல என்ற மனோ பாவத்தை வளர்க்க முடியும். இதனால் மேலும் [ஆணுக்கத்திற்கான வாய்ப்புகள் [அங்கு அதிகரிக்கும். உதாரணத்திற்கு ஒரு பகுதி தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி போராடும்போது இன்னொரு பகுதி தொழிலாளரை கொணர்ந்து வேலை செய்விப்பதனால் குறித்த தொழிலாளரின் கோரிக்கைகளை பலவீனப்படுத்த முடிவது போல இங்கு ஜப்பானிய பெண்களும் இறக்குமதியாகும் பெண்களின் மூலம் ஆணுக்கத்தை ஒறுக்க கொள்ளும் சூழலுக்குத் தள்ளப் படுகிறார்கள். எனவே இத்தகைய பெண் கொள்வனவு உள்ளும் புறமும் சமூக ரீதியில் பாதகமானதே.

இத்தகைய பாதகங்களில் இவங்களையும் சம்பந்தப் படுவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. இலங்கை, அமெரிக்கப் பொருளாதார அரசியல் வலைப்பின்னலுக்குள் அகப்பட்டுள்ளது. ஆகவே இதற்கான போக்குக்கான வாய்ப்புக்களே தென்படுகின்றன. குறிப்பாக தமிழிழப் பிரதேசத்தில், போராட்டக்திலும், இயக்க மோதல்களிலும், முன்யோசனையற்ற குழுவாதப் போக்குகளாலும் இளைஞர்கள் அதிகம் இறந்துபடுவதனாலும் விநோதாரமாக அதிகரித்துக் காணப்படுகின்றது. தினம் போன்ற விடயங்களில் ஏற்கனவே பெண்களின் திருமண வயதெல்லை இங்கு கூடிச்செல்லும் நிலையில், பொறுப்பற்ற முறையில் இளைஞர்களை கிடாய்களைப் போல் பலியிடுவதனால் பெண்கள் சம்பந்தமான சமூக அழுக்கம், மேலும் [வளரும். அமெரிக்க சார்பு தன்மையடையும் இலங்கையில் எமது பகுதிகளிலிருந்தும் பெண்கள் இத்தகைய வர்த்தக நிர்ப்பந்தங்களுக்குள் தள்ளப்படும் சூழலை, வேதனையுடன் நாம் முன்னுணரவேண்டும்; புத்திகாலித்தனமாக நாம் எதிர் கொள்ளவும் வேண்டும். □

ஆசிய கலாசாரச் சீரழிவில் அமெரிக்காவின் பங்கு

தோழன்

(Blue films) தயாரிப்பதற்கெனவும் பயன்படுத்தப்படுவதுண்டு. இதிலிருந்து இல்ரவேலியரும் புதியதோர் அனுபவத்தைக் கற்றனர்.

அதாவது இல்ரவேலிய ராணுவத்தினர் பலர் மத்திய கிழக்கு யுத்தத்தின் போது அங்கவினர்களானார். அவர்களுக்கு விபச்சாரிகளை விநியோகம் செய்யும் பழக்கம் ஆரம்பத்தில் நடைமுறையில் அங்கு இருந்தது. தெ. கி. ஆசிய நாடுகளின் சூழலேயும் அமெரிக்க அநுபவத்தையும் அவதானித்த [இல்ரவேலியர்கள், தெ. கி. ஆசிய [நாடுகளிடமிருந்து நிரந்தரமாகவே பெண்களை கொள்வனவு செய்து ஒரு பகுதியினரை ராணுவ முகாம்களில் விபச்சார தேவைக்கும், இன்னொரு பகுதியினரை அங்கவினர்களான ராணுவத்தினரை மணம் முடிப்பதற்கும் பயன்படுத்தினர். மணம் முடிப்பதற்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இந்த இல்ரவேலிய அநுபவத்திலிருந்து ஜப்பானியர் மேலும் ஒருபடி தாவினர்.

1980 களில் ஜப்பானியர்கள் இத்தகைய பெண் கொள்வனவுகளில் நாட்டம் கொள்வது அதிகரித்தது. ஜப்பானிய மரபில் இதற்கொரு இடமிருந்ததுடன் புதிய கைத்தொழில் சமூக அபிவிருத்திச் சூழல் அதனை [மேலும் தூண்டியிட்டது. நகரத்தை நோக்கிய நகர்வும் பெண்களுக்கான வேலை வாய்ப்பும் அதிகரிக்க ஜப்பானிய கிராமத்துப் பெண்கள் நகரங்களில் அதிகம் குவிகின்றனர். அத்துடன் பெண்களிடம் நவீன விழிப்புணர்வும் அதிகரிக்க இது ஆண்களின் மேலாதிக்கத்தை சற்றுத்தளர்த்துவதாகவும் காணப்பட்டது. இந்நிலையில் வசதிப

சிவராத்திரி நினைவாக

சிவராத்திரி: சிவனுக்கு விருப்பமான இராத்திரி சிவராத்திரி எனப்படும். சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி என்று ஐந்து வகைப்படும்.. ஆண்டிலுள்ள 24 சதுர்த்தசிகளிலும் சிவபூசை நித்திய சிவராத்திரியாகும். தைமாதம் கிருஷ்ணபட்சம் பிரதமை முதல் 13 நாள் பூசை பட்ச சிவராத்திரி, மாசி கிருஷ்ண சதுர்த்தசி, பங்குனி முதல் திருதியை, சித்திரைக் கிருஷ்ண அஷ்டமி முதலியவை மாத சிவராத்திரி. இங்கட்கிழமை முழுவதும் அமாவாசையாக வந்தால் யோக சிவராத்திரி. மாசிமாதம் கிருஷ்ண சதுர்த்தசியில் நள்ளிரவில் சிவபெருமான் இலிங்கத்தில் தோன்றினார். அன்றே மகாசிவராத்திரி. ஆதலால் இப்பொழுதும் அந்த இரவில் உலகிலுள்ள எல்லா இலிங்கங்களிலும் சிவன் தோன்றுகின்றார். அன்று சிவபூசை எல்லாருக்கும் விருப்பத்தைக் கொடுக்கக்கூடியது. அன்று காலை குளித்துக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிவாலயம் சென்று பஞ்சாட்சரம் அல்லது சிவநாமத்தை ஜபிக்க வேண்டும். இரவில் சிவலுக்கு விளக்கிட்டு நல் வெண்ணெய், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, இளநீர், பழச்சாறு முதலியவைகளால் அபிஷேகம் செய்து பல விதமான நின்பண்டங்கள், பழங்கள் முதலியவைகளைப் படைக்க வேண்டும். சிவனடியார்க்கு நம்மால் இயன்றளவு நன்மை செய்ய வேண்டும். இவ்விதம் 14 ஆண்டுகள் சிவராத்திரி வரதமிருந்து கடைசி ஆண்டில் பூர்த்தியும் செய்யவேண்டும். அன்று நங்கத்தாலோ வெள்ளியாலோ சிவலிங்கம் செய்வித்து, அதில் அர்ச்சனை செய்து அதைத்தானம் செய்ய வேண்டும். மற்ற தானங்களும் செய்ய வேண்டும். அவ்வாறு சிவபூசை செய்வோருக்கு சிவ பிரான் முத்தியைக் கொடுக்கிறார் என்பது நம்பிக்கை.

சிவராத்திரி கதை:

கந்த புராணத்திலுள்ளது.

முற்காலத்தில் ஊனுண்டு வாழும் ஒரு வேடன் இருந்தான். அவன் மாசிமாதம் கிருஷ்ண சதுர்த்தசியன்று வேட்டையாடக் காடு சென்றான், அன்று முழுவதும் அலைந்து திரிந்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. இரவில் ஒரு குளக்கரை சேர்ந்தான். அவ்விடம் ஒரு வில்வ மரமும் அதனடியில் ஒரு பெரிய சிவலிங்கமும் இருந்தன. புலிவருமோ என்ற அச்சத்தால் மரத்தின் மேல் ஏறிய வேடன் உறக்கம் வராமலிருக்க, அடிக்கடி வில்வ இலைகளைப் பறித்துக் கீழே எறிந்து கொண்டிருந்தான். அது இவிங்கத்தின்மேல் விழுந்தது. காலையில் குடிசைக்கு வந்து ஊனின்றியே உண்டான். இதனால் அவனுக்கு உபவாசம், சிவபூசை, கண்விழிப்பணைகள் இயலகள் ஏற்பட்டன. அதனால் அவன் மரிக்கும்போது யமதூதர்கள் அவனை இழுத்துப்போக வந்த போது சிவராத்திரி விரத மகிமையால் சிவகணங்கள் வந்து யம தூதர்களை விரட்டி, அவனைச் சிவலோகத்துக்கு அழைத்துப் போயினர். இதைக் கேட்டுக் கோபங் கொண்ட யமன் சிவபிரானையணுகி விண்ணப்பம் செய்ய சிவபிரான் வேடனுடைய சிவராத்திரி விரதத்தையும் அதன் பயனை வேடனுக்குக் கிடைத்த உயர் பதவியையும் யமனுக்கு உரைத்தார். வேடன் சகல போகங்களுடன் சிவலோகத்தில் வாழ்ந்தான்.

நன்றி: கலைக்களஞ்சியம் 4 ஆம் பாகம்

வாழ்வு சார்ந்த ஒவ்வொன்றையும் வடிக்க விரும்புகிறேன்

சலனச்சாரல்

புத்தாடெப் தாஸ்குப்தா

o உங்கள் படங்களின் மூலமாக நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

□ நம் காலத்தின் யதார்த்தத்தைப் பற்றிய எனது எதிர்வினைகளையும், பகுப்பாய்வுகளையும் சொல்ல விரும்புகிறேன். வேறு வார்த்தைகளில் சொன்னால் நான் நம் சகாப்தத்தினுடைய சாராம்சத்தை எனது படங்களில் கொண்டுவர விரும்புகிறேன்; அவ்வாறு செய்கையில் வாழ்வு சார்ந்த ஒவ்வொன்றையும் வடிக்க விரும்புகிறேன்.

o நீங்கள் யாருக்குச் சொல்ல விரும்புகிறீர்கள்? நமது மக்கள் தொகையில் பெரும் பான்மையினருக்கா? அல்லது கலை ஆர்வம் கொண்ட சிறுபான்மையினருக்கா?

□ ஒரு திரைப்படப் படைப்பாளி (Film Maker) ஒரு கலைஞரை இருக்கவேண்டும்; ஒரு கலைஞன் எப்போதுமே அதிகமான பார்வையாளர்களை சென்றடைவதைத்தான் விரும்புவான் என நான் கருதுகிறேன். மேலும் மேலும் பார்வையாளர்கள் எனது படங்களைப் பார்த்து அவற்றை விரும்புவார்களெனில் நான் மகிழ்ச்சி படைவேன். அதே சமயம், எவ்விதத்திலும் சமரசம் செய்து கொள்ளவோ எல்லோரையும் திருப்திப்படுத்தும் எளிதான வழிகளில் பின்பற்றவோ நான் தயாராயில்லை. சம்பிரதாயமான படம் பண்ணுபவனுக என்னுல் இருக்கமுடியாது. அவ்வாறு நான் இருக்க முயன்றால் அது எனக்குப் பேரழிவைத்தான் கொண்டுவரும்.

o உங்கள் அபிப்ராயத்தில் ஒரு திரைப்படப் படைப்பாளியின் (Film maker) பாத்திரம் என்ன?

□ தொழிற் புரட்சிக்கு பிறகு முதலாளித்துவ காலகட்டம்தொடங்கியபோது முதலாளித்துவ காலகட்டத்தின் போது தான், கலை வடிவங்களிலேயே சக்திவாய்ந்த சினிமா என்னும் வெகுஜன சாதனம் தோற்றம் கொண்டது. துரதிர்ஷ்டவசமாக தொடக்கத்திலிருந்தே இந்த வலிமை மிக்க சாதனம் விளம்பர உலகின் சொந்தக்காரர்களது பேராசைக்கும் பலியாகி, வெகுஜனங்களுக்கு ஒருவகையான போதைப்பொருளாக மாற்றப்பட்டது. அப்போதும் சரி, இப்போதும் சரி, பிரதானமாக அது மக்களை முட்டாள்களாக்கி பணம் பண்ணும் ஒரு கணவுத் தொழிற்சாலையாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஹொலிவுட், பம்பாய், கல்கத்தா, சென்னை அல்லது உலகின் பெரிய சினிமா தயாராகுமிடங்கள் எங்குமே இதுவேதான் கதை. சினிமா தயாரிப்பவர்கள் என்றழைக்கப்படும் அவர்கள் வண்ணவண்ண உறைகளில் அழகான முறையில் பொதியப்பட்ட 'சரக்கு'களை பெரும்பாலும் மலத்தையே மக்களிடம் விநியோகித்து, மக்களை ஏமாற்ற சொந்தமாக மோசடிக் கும்பல்களை வைத்திருக்கின்றனர். ஆனால் ஒரு நேர்மையான திரைப்படப் படைப்பாளி, தன்னைச் சுற்றியுள்ள யதார்த்தத்துடன்னின் புரிந்து அதனைத் தனது படத்தில் மறு உருவாக்கம் செய்வதோடு மட்டுமின்றி படைப்பு ரீதியில் அதைக் கையாண்டு அந்த யதார்த்தத்தின்முக்கியத்துவத்தைத் தனது படங்களில் நிறுவி தன்கேயுரிய ஓர் உலகை உண்டாக்கவும் வேண்டும். அவன் தனது காலத்தில் நிலவும் சமூக, அரசியல் மற்றும் மனித நிலைமைகளைப் புரிந்து கொண்டு, பார்வையாளன் அதனுடன் உறவு கொள்ளுமாறு தூண்டவேண்டும். அதற்காக வேண்டி, படம் பண்ணுகிற ஒருவன் அரசியல்வாதியாகவோ, பிரச்சாரம் செய்பவனுகவோ அல்லது ஒரு நீர்க்கதறியாகவோ இருக்கவேண்டுமென்பது அல்ல. அவன் ஒரு கலைஞனுக இருக்கவேண்டும். வலிமைமிக்க சினிமா என்னும் சாதனத்தை வணிக, லாபத் தனிகளிலிருந்து விடுவிக்க அவன் முயலவேண்டும். இந்த லட்சியம் எளிதான ஒன்றல்ல. அதை அடைய ஒருவன் சிரமப்பட்டுத்தான் ஆகவேண்டும்.

o சினிமா சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கும் என நீங்கள் நம்புகிறீர்களா?

□ சினிமாவையும் உள்ளடக்கிய எந்தப் பண்பாட்டுச் சாதனமும் தனியாக இந்த சமூகத்தை மாற்றிவிடச்டியவிமையைப் வபெற்றிருக்கவில்லை. ஆனால், மற்ற கலா சார இயக்கங்களுடன் இணைந்து சினிமாவும், யதார்த்தம் பற்றிய சரியான புரிதலை அடைவதற்கும், அதன் மூலம் மாற்றங்களைத் துவக்குவதற்கும் மக்களுக்கு நிச்சயம் உதவி செய்யும்.

o வெளிநாட்டவர்களால் முன்வைக்கப்பட்ட 'இந்தியத்தனம்' (Indianness) என்ற கருத்துக்கு வளர்ந்துவரும் சில படத் தயாரிப்பாளர்களும் இரையாகி வருகின்றனர். ஆனால் வெளிநாட்டவர்கள், 'இந்தியத்தனம்' பற்றி முற்றிலும் விளக்கமற்ற எளியபொருள் கொண்டுள்ளனர். சினிமா உருவாக்கத்தில் இத்தகைய போக்கு அபாயகரமானதென நீங்கள் உணரவில்லையா?

□ நீங்கள் கூறுவது சரியாக இருக்கலாம். ஒருமுறை, சத்யஜித் ரே கூட தனது கஞ்சன் கங்கா, தேவி மற்றும் சில படங்களை வெளிநாட்டுப் பார்வையாளர்களும், விமர்சகர்களும் எவ்வாறு புரிந்துகொள்ளவில்லை, பாராட்டவில்லை என்பதைக் குறிப்பிட்டுள்ளார். என்னைவில் கஞ்சன் கங்காவும், தேவியும் அவரது முக்கியமான இரண்டு படங்களாகும். நமது சமூக மற்றும் அரசியல் யதார்த்தத்தைக் கவனத்தில் கொண்டு பார்த்தால் அந்தப் படங்கள் இன்றளவும் கூட மிகத் தரமான படங்களாகும். ஆனால், இந்த இரு படங்களினதும் முக்கியத்துவத்தை வெளிநாட்டவர்கள் தவறவிட்டுள்ளனர். ஏனெனில், அவர்கள் காணவிரும்பிய 'இந்தியத்தனம்' அவற்றில் இல்லை. அவர்கள் கருதும் 'இந்தியத்தனம்' ஏழ்மை, படிப்பறிவின்மை, மதக்காழ்ப்புணர்ச்சி, மூடநம்பிக்கை, சமூகப் பிற்போக்குத்தனம், கிராமப்புறங்களில் இருப்பவனுக்கும் இல்லாதவனுக்கும் ஏற்படும் முரண்பாடு பற்றிய மிகச்சுருங்கிய பார்வை ஆகியவற்றின் ஒரு விநோதக் கலவை. இவை எல்லாம் உருட்டித் திரட்டிய ஒரு சூத்திரம்தான் அவர்கள் கருதும் 'இந்தியா'. இந்த இந்தியத்தனம் உண்மையிலேயே இந்தியாவில் அடிப்படைச் சிக்கல்களை விட்டுவிட்டு புராணக்கூறுகள், மரபுகள், எளிய கட்டுக் கதைகள் ஆகியவற்றால் உருவமைந்த மாயத் தோற்றம்தான். இந்தக் கூறுகளே ஓர் 'இந்தியத் தனம்' என்று படங்களின் மூலம் கலந்து விற்பனை செய்கின்றன.

ஒரு போக்கு வளர்ந்து வருவதை நான் அச்சத்தோடு கவனித்து வருகிறேன். இந்தியக்கலை உலகில் சில ஆண்டுகளுக்கு முன்னுல் ''தாந்திரிகக் கலை'' (Tantra Art) என்ற பெயரில் நிகழ்ந்ததன் மறு நிகழ்வே இது. இந்தச் சூழல் அச்சுறுத்தும்படி உள்ளது. நம்மில் சிலரும் இரையாகிக் கொண்டிருக்கிற ஒருவகையான அறிவு ரீதியான காலவியாதிக்கத்தைத்தான் இது காட்டுகிறது.

o நீங்கள் ஒரு கவிஞராகவும், திரைப்படப் படைப்பாளியாகவும் இருக்கிறீர்கள். எவ்வாறு இந்த இரண்டு கலை வடிவங்களையும் உங்கள் படைப்பில் ஒன்றிணைக்கிறீர்கள்?

□ சினிமாவும் கவிதையும் இரு வேறுபட்ட ஊடகங்கள். அவை தமக்கேயான வெளிப்பாட்டு வடிவங்களைக் கொண்டுள்ளன. இருப்பினும் இரண்டுக்கும் பொதுவானதொரு பந்தத்தைக் காண்கிறேன். ஒரு கவிஞன் கவிதைகளை எழுதிக் கொண்டிருக்கிற போதே, திரைப்படங்களின்மீது விருப்பத்தை வளர்த்துக்கொள்வதும், அதே போல் ஒரு திரைப்படப் படைப்பாளி தனது படத்தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும்போதே கவிதைமீது விருப்பத்தை வளர்த்துக் கொள்வதும் சாத்தியமானதுதான். ஆனால், ஒருவன் தான் தனது படைப்பு வெளியீட்டிற்குத் தெரிவுசெய்துள்ள ஊடகத்தின் உள்ளார்ந்த விதிகளுக்கு விசுவாசமாக இருப்பது மிகவும் அவசியம். இவ்வாறு நிரைப்படம் நிரைப்படமாகத்தான் இருக்கவேண்டும். அது ஓரளவேனும் கவிதையாக முடியாது. கவிஞராகவும் திகழ்ந்த ஜீன் காக்தா (Jen Cocteau) என்பவர் கவிஞர்களுக்கான சினிமா படைப்பாளி ஆவார். அவர், ஒரு சினிமா படைப்பாளியாகவும் வெற்றி பெற்றவர். அவருடைய ஆர்ஃபீ (Orphee) முதலில் ஒரு நிரைப்படம்; பிறகுதான் மற்றப்படியெல்லாம். அதுபோலவேதான் அவரது 'லாபெல் லாபேத்' (Labelle La Bete) என்ற படமும். என் நினைவில் வருகிற இன்னொரு நிரைப்படப் படைப்பாளி பியர்பாலோ பசோலினி. நான் கவிதையிலிருந்து பல விஷயங்களைப் பெறுவதற்கு முயற்சிக்கிறேன். மாயகாவ்ஸ்கி சரியாகக் கூறியது போல "ஒரு கவிஞனின் தொழிலும், வசன கர்த்தாவின் தொழிலும் அடிப்படையில் ஒன்றுதான்" என்று நான் நம்புகிறேன். ஆனால் நிரைப்படமோ கவிதையோ எந்த வகையான படைப்பாக்கத்துக்கும் ஒரு கவித்துவமான பதிவு அவசியம். உண்மையில் சினிமாவானது ஏனைய கலை வடிவங்களிலிருந்து ஏராளமான வற்றைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அது எதையும் பின்பற்ற முயலக்கூடாது. அது ஏனையவற்றிலிருந்து சுதந்திரமாக இருக்கவேண்டும்.

முக்கியமான இந்தியத் திரைப்பட கர்த்தாக்களில் ஒருவராகக் கருதப்படும் 'புத்தாடெப் தாஸ்குப்தா' 'ரஞ்சித்ராய்' என்பவருக்கு அளித்த பேட்டியின் (Deep Focus – சஞ்சிகை) தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் இவை. பன்முகப்பட்ட ஆளுமை கொண்ட குப்தா கல்கத்தாவிலுள்ள கல்லூரி ஒன்றில் எட்டு வருடகாலம் பொருளாதாரத்தைப் போதிப்பவராக இருந்தவர். குறிப்பிடத்தக்க கவிஞருமான இவர் இதுவரை ஒன்பது செய்திப் படங்களையும், ஆறு கதைப்படங்களையும் (Feature Films) உருவாக்கியுள்ளார். அவரது ஆக்பிரத்திய படமான 'ஃபெர்' (Return) சில மாதங்களின் முன்னர் 'தூரதர்ஷனில்' ஒளிபரப்பப்பட்டபோது, யாழ். மாவட்டத்திலுள்ளவர்களும் பார்க்க முடிந்தது.

---

o பேச்சு சாராத தொடர்பு (Non-Verbal) பேச்சு சார்ந்த தொடர்பை (Verbal) விட சக்தி வாய்ந்தது என்று கூற வருகிறீர்களா?

□ இருக்கலாம். ஆனால் கவித்துவக் காட்டி என்பது வேறு விஷயம். எவ்விதப் படைப்புக்கும் பின்னுல் இருக்கிற மிக முக்கியமான விஷயம் அது தான். நீங்கள், ஆந்த்ரேய் தார்க்கோவ்ஸ்கியின் ஏதேனும் ஒரு படத்தைப் பார்க்க நேர்ந்தால் நான் கூறுவதன் அர்த்தம் உங்களுக்குப் புரியும். தார்க்கோவ்ஸ்கி மட்டுமல்ல வேறுபல நிரைப்படப் படைப்பாளிகளும் இந்தக் கவித்துவ காட்டியால் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். ரோபர்ட் ப்ரெஸ்ஸன் அல்லது சத்யஜித் ரேயை நாம் எடுத்துக்கொண்டு பார்த்தால் இதனைக் காணலாம். நில சமயங்களில் உங்கள் மனநில் என்ன நிகழ்கிறது என்பதை பிரக்ஞைபூர்வமாக உங்களால் அறிய முடியாது. ஆனால் அதை உங்களால் உணர முடியும். உங்களுக்குள் ஆழத்தில் ஏதோவொன்று அசாதாரணமான ஒன்று நிகழ்கிறது என்பதை நீங்கள் உணரமுடியும். அது படிப்படியாகஉங்கள் மனக்கண் முன்னுல் வடிவம் பெறும்.

(11ஆம் பக்கம் பார்க்க)

இந்தியப் பிரதமருக்கு பகிரங்கக் கடிதம்— சால்மன் ரஷ்டி

அன்பார்ந்த ராஜீவ் காந்தி,

'சாத்தானின் செய்யுள்கள்' என்ற என் நாவலை இந்திய சுங்கச் சட்டத்தின் 11-ஆம் பிரிவின்படி தடை செய்வதாக இந்திய நிதித்துறை அமைச்சும் சென்ற ஒக்டோபர் 5ஆம் நாள் புதன்கிழமையன்று அறிவித்தது. இந்திய வாசகர்கள் எவற்றைப் படிக்கலாம், எவற்றைப் படிக்கக் கூடாது என்பதை நிதித்துறை முடிவு செய்வது உலகோர் பலருக்கு வியப்பைத் தரும். அது ஒருபுறம் இடக்கட்டும். ஏனெனில், அவ்வறிவிப்பின் இறுதியில் அதை விட விந்தையான வாசகம் ஒன்று காணக்கிடைக்கிறது.

''ரஷ்டி எழுதிய நூலின் கலை இலக்கியத் தகுதியை இத்தடை உத்தரவு எவ்வகையிலும் குறைத்து மதிப்பிடவில்லை'' என்று அவ்வறிவிப்பின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பி. டி. ஐ. செய்தி) குறிப்பிலிருந்து நான் மேற்கோள் காட்டியுள்ளேன்) ''பாராட்டுக்கு நன்றி'' என்று மட்டுமே இதற்கு என்னால் பதில் சொல்ல முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு. சையது சஹாபுதீன், குர்ஷீது அலம் கான் உள்ளிட்ட சில முஸ்லிம் அரசியல்வாதிகளின் வற்புறுத்தலின் பேரிலேயே இந்நூல் தடைசெய்யப்பட்டது. இந்நூலைத் தாம் படிக்கத் தேவையில்லை என்று கூறும் அதே வேளையில், இத்திவிரவாதிகள் (இவர்களை அடிப்படைவாதிகள் என அழைக்கவும் நான் தயங்கமாட்டேன்) என்னையும் என் நூலையும் தாக்கியுள்ளனர். இந்திய அரசு இவர்கள் பேச்சைக் கேட்டுச் செயல்பட்டுள்ளமை மனக்கலக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே, நிதித்துறையின் அறிக்கை குழப்பம் தருவதாக அமைந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை. சென்ற வார இறுதியில், அரசாங்கத்தின் மற்றொரு அறிக்கை என் பார்வைக்கு வந்தது. மதத் தீவிரவாதிகள் நிரந்தரக் காட்டித் தவறுகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பாகச் ''சாத்தானின் செய்யுள்கள்' நூலில் சில பகுதிகள் அமைந்திருப்பதாலேயே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக என் நூல் தடைசெய்யப்பட்டதென்று அவ்வறிக்கை கூறுகிறது.

என் நூல், தெய்வ நிந்தனையானதோ ஆட்சேபகரமானதோ இல்லையென்று இதனால் தெளிவாகிறது. சொல்லப்போனால், என் நூலின் நன்மையைக் கருதியே அது தடை செய்யப்பட்டது என்றாகிறது. உண்மையில், இது அதிர்ச்சி தருகிறது.

குண்டர்களாலும் காமுகர்களாலும் எப்பாவமும் அறியாத ஒருவர் தாக்கப்படலாம் என்று அறிந்து, பாதுகாப்புக்காக அந்த அப்பாவியையே சிறையிலிடுவதற்கு ஒப்பாகும் இது. திரு. காந்திஅவர்களே, ஒரு சுதந்திரச் சமுதாயம் நடந்து கொள்ளும் முறை இதுவன்று. முன்னணி நாடுகளும் பருவ இதழ்களும் இத்தடை உத்தரவைக் கண்டித்துள்ளன. எடுத்துக் காட்டு: 'மிலிஸ்டிலிய முடிவு' ('இந்து' தலையங்கம்), 'நித்தனேக் கட்டுப்பாடு' ('இந்தியன் எக்ஸ்பிரஸ்' தலையங்கம்). இதனால் தான் நியூஸ்வீக் அமில், ஹரால்டு பிண்டர், ஸ்டீவன் ஸ்பெண்டர், டாம் ஸ்டாப்பார்டு முதலான புகழ் பெற்ற எழுத்தாளர்கள், இன்டர்நேஷனல் பென் (International PEN), இண்டெக்ஸ் ஆன் சென்சர்ஷிப் (Index on censorship), இந்திய நூல் வெளியீட்டாளர் — விற்பனையாளர் சங்கம் ஆகிய அமைப்புகளோடு சேர்ந்து இதனைக் கண்டித்துள்ளனர்.

கருத்துச் சுதந்திரமே ஜனநாயகச் சமூகத்தின் ஆணிவேர். உலகின் பார்வையில் இந்திய ஜனநாயகம் நகைப்புக்கு உள்ளாகி வருகிறது.

சையது சஹாபுதீனும், முஸ்லிம்களின் உணர்வுகளுக்குத் தாமே பாதுகாவலர்கள் எனக் கூறிக்கொள்ளும் அவரைப் போன்ற பிறரும், 'நாகரிகமடைந்த எந்த சமுதாயமும் இந்நூலை வெளியிடுவதற்கு அனுமதி நல்காது' என்று கூறுவது, அவர்கள் விஷயங்களைத் நல்ல நோக்கப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதையே காட்டுகிறது. தென்ஞாபிக்க முறையில் நடந்து கொண்டுள்ள இந்தியா இனிமேல் தன்னை நாகரிகமடைந்த சமுதாயம் என்று கூறிக் கொள்ள முடியுமா என்பதே என் நூல் தடை செய்யப்பட்டுள்ளதால் எழுந்துள்ள கேள்வி. இவ்விவகாரத்தில் உண்மை எது, பொய்மை எது என்பதைக் கொஞ்சம் இனம் பிரித்துக் காண்போம். என் எதிராளிகளைப் போலவே, ''சாத்தானின் செய்யுள்கள்'' நூலை நீங்களும் படித்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். எனவே, இன்றிய மையாத செய்திகள் சிலவற்றை நான் விளக்க விரும்புகிறேன். என் நூல் இல்லாத்தை நேரடியாகத் தாக்குகிறது என்று நான் ஒப்புக் கொண்டுள்ள தாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவே இல்லை.

என் நூலின் (இந்நூல் இல்லாத்தைப் பற்றியதல்ல என்பதை முதலில் மனங்கொள்ள வேண்டும். பெயர்வு, உருமாற்றம், அயன்மைப்பட்ட மாந்தர், காதல், மரணம், இலண்டன், பம்பாய் ஆகியன பற்றியே என் நூல் பேசுகிறது.) பிரச்சனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள பகுதி ஒரு தீர்க்கதரிசியைப் பற்றியது. அவர் பெயர் மகம்மது இல்லை. அவர் வாழும் நகரம் வியப்புறு கற்பனையின் பாற்பட்டது — மண்ணாலான அந்நகரம் நீர் பட்டதும் கரைகிறது. கற்பனைச் சிடர்கள் பலர் அவரைச் சூழ்ந்துள்ளனர். அவர்களுள் ஒருவன் என் முதற்பெயரைத் தாங்கியுள்ளான்.

மேலும், இக்காட்சி முழுவதும் கனவில் தோன்றுகிறது—கற்பனை மாந்தரின் கற்பனைக் கனவு. அக்கற்பனை மாந்தர் ஒரு நடிகராவார். மேலும், அவருக்கு மூளையும் கலங்கிவிட்டது. வரலாற்றிலிருந்து இதற்கு மேல் விலகிச் செல்ல இயலுமா? ஞானேதயம், உலகின் பெருஞ்சமயம் ஒன்றின் பிறப்பு ஆகியன பற்றிய என் பார்வையை இக்கனவுக் காட்சியில் நான் விளக்கியுள்ளேன். இஸ்லாமியப் பண்பாட்டை மையமாகக் கொண்ட மதச் சார்பற்ற ஒருவனின் பார்வை இது. மதசார்பற்றது எனக் கூறிக் கொள்ளும் நவீன இந்தியாவில் இத்தகைய சரும் பொருள்களை இலக்கியம் கையாளக் கூடாது என்று இந்திய நிதித்துறைகூறமுடியுமா? ஆம் எனில், நான் நினைத்ததை விட பிரச்சனை மேலும் சிக்கலாகிறது.

திரு. காந்தி அவர்களே, நான் இருக்கும் இடத்திலிருந்து பார்க்கும் போது எந்தவொரு தீவிர மதப்பிரிவின் வற்புறுத்தலையும் எதிர்க்கும் ஆற்றல் உங்கள் அரசாங்கத்துக்கு இல்லை என்றும், இந்தியாவின் அரசியல் விவகாரங்களை மத அடிப்படைவாதிகளே முடிவு செய்கின்றனர் என்றும் தோன்றுகின்றது. திருவாளர் சஞ்சய்தீன், குர்ஷீது அலம் கான், சுலமான் ரேட்டு ஆகியோருக்கு என் நாவலைப் பற்றி எவ்வகை அக்கறையும் இல்லை என்பது எனக்கும் தெரியும்; உங்களுக்கும் தெரியும். உண்மையில், முஸ்லிம்களின் வாக்குச்சீட்டுக்களை யார் பெறுவது என்பதே பிரச்சனை. அரசியல் களத்தில் என் புத்தகம் காலம்தாழ்வதை நான் வெறுக்கிறேன். இப்பிரச்சனையின் முடிவில் நீங்கள்ஒரு பிலிஸ்தைனுக்கு, ஜனநாயக எதிர்ப்பாளராக மட்டுமல்லாமல் ஒரு சத்தரிப்பவராதியாகவும் காட்சி தரப் போகிறீர்கள் என்பதே என் வெறுப்பையிட உங்களுக்கு அதிகக்கவலை தரவேண்டும்.

பிரதமர் அவர்களே, நிதித் துறையிடம் இலக்கியத்தைப் பற்றி பேச என்னால் முடியாது. என்னோப் பொறுத்தவரை இப் பிரச்சனை நம்மிருவருக்கும் இடையிலானது. ஒரு கேள்வியை நான் நேரடியாகக் கேட்கிறேன். எத்தகைய இந்தியாவை நீங்கள் ஆள விரும்புகிறீர்கள் — சுதந்திரமான சமுதாயத்தையா, ஒடுக்குமுறை நிறைந்த சமுதாயத்தையா?

(9ஆம் பக்கம் பார்க்க)

இன்னொரு வெண்ணிரவு

சாந்தன்

'வெண்புறு வெளியீடு'

விலை: ரூபா 10

சாந்தனின் நாலுருப் பெற்ற ஆக்கங்களுள் ஒன்பதாவது வெளியீடாக வந்துள்ளது அவரது 'இன்னொரு வெண்ணிரவு' என்னும் சிறுகதைத் தொகுப்பு. இது அவரின் மிக அண்மைக்கால (1988 ஒக்டோபர்) அறுவடை. இதில் அடங்கியுள்ள 14 சிறுகதைகளுள் 'எட்டியது', 'ஏன்' 'அலுமாரி' ஆகிய மூன்று கதைகளோடும் தலிர ஏனைய கதைகள் யாவும் எண்பதுகளுக்குள் வெளிவந்தவை. விடுபட்ட மூன்றும் கூட எண்பதுகளின் ஆரம்ப எல்லையை எட்டியவையே. அகஞல் இக் கதைகளை சாந்தனின் இலக்கிய முதிர்வின் உதிர்வுகளாகக் கொள்ளலாம்.

சிறுகதைகள் எனப் பேர் பெற்ற இக் கதைகள் குறுங்கதைகளாக, ஒரு பக்கம் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாதவையாக வெளிவந்துள்ளன. ஆனால் இவற்றை இவர் சிறுகதைகள் எனப் போட்டிருப்பதால், குறுங்கதைகள் என இவர் கருதுவது இவரது கருவு தொகுதியில் உள்ள கதைகள் போன்றவற்றையே என, நாம் கருதுவதில் தப்பிருக்காது.

இவரது சிறுகதைகள் ஏன் குறுங்கதைகளாகின்றன? இவரது குறுங்கதைகளேன் 'கரு குக்' கதைகளாகின்றன? குறுக்கத்தில் ஏன் இவருக்கு இத்தனை மோகம்?

'நாவலுக்குரியகாலம் போய் விட்டது. இது சிறுகதைக் குரிய காலம்' அல்லது 'சிறுகதைக்குரிய காலம் கடந்து விட்டது இது குறுங்கதைக் குரிய காலம்' என்கின்ற 'சமூக, வரலாற்று ஆய்வு' விற்பன்னர்களின் விமர்த்தங்களில் நாம் இறங்கத் தேவையில்லை.

இதனை ஒவ்வொருவரின் தனிப்பட்ட குணாம்சங்களின் வெளிப்பாடாகவே கருதலாம். சாந்தனின் சிறுகதைகளேன் குறுகிப் போகின்றன? அவர் ஒரு தொழிற்நுட்பவியலாராக இருப்பதால், அதற்கேற்ப எதையும் 'இழுவு'ண்ண விடாது. சிக்கனத்தையும் செம்மையையும் பேணும் மனதின் வெளிக்காட்டலா இது? இத்தகைய 'சிக்கனத்'துக்கும் 'செம்மைக்கும்' பழகிப்போன மனம், நீண்ட விஷயங்கள் எழுதினால் தான் பேணும் இலக்கிய ஆற்றல் 'இழுவு'ண்டு போகும் என்ற பயத்தின் குறுக்கமா இச் சிறுகதைகள் என்னும் குறுங்கதைகள்?

அதே நேரத்தில் சாந்தன் 'ஒட்டுமா' என்னும் நாவலும் 'ஆரைகள்' என்னும் நெடுங்கதைகளும் எழுதியுள்ளார் என்பதையும் நாம் மனதில் கொள்ளல் வேண்டும்.

இந் நெடுங்கதைகளில் இவர் தனது இலக்கியத் தரத்தைப் பேண முடிகிறதா என்பதைப் பொறுத்தே, நமது கேள்விகளுக்குப் பதில் காண வேண்டும். (இதை நாம் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் ஆய்வுக் கெடுப்போம்)

சரி, 'இன்னொரு வெண்ணிரவு' கதைகளில் இலக்கிய வலு எவ்வாறு உள்ளது?

இத் தொகுப்பில் அடங்கியுள்ள 14 கதைகளுள் 'உலகங்கள்' 'போக்கு' 'யுகங்கள்' 'வாழ்த்தி', போன்ற கதைகள் இன்று தமிழ் மண் அனுபவிக்கும் சமகாலப் பிரச்சினைகளை வெளிக்காட்டுவதில் வெற்றி பெறுகின்றன என்றே கூற வேண்டும். இவற்றுள் 'போக்கு', என்னும் சிறுகதை நமது கலாசாரம், ஒழுக்கம், அன்பு, பண்பு எல்லாமே இன்று தறிகெட்டுப் போய் விட்டன என்பது ''பெல் அடிச்சா விலத்த வேணுமெண்டிருக்கா?'' என்று மேஜட்டில் சைக்கிளில் போகும் கடியர், பெல் அடித்தவனுக்கு சொல்லும் பதிலோடு முடிவும் போது, அழகாகக் காட்டப் படுகிறது.

அவ்வாறே நமது வாழ்க்கை, இயற்கை பற்றிய ஆழ்ந்த அனுபவிப்பு எல்லாம் நமது சுதந்திரமின்மையால் கெட்டுப் போவதை 'யுகங்கள்' அழகுறக் காட்டுகின்றது. மேலே பறக்கும் அழுக்குப் பச்சைத் தும்பியால் கெட்டுப் போகும் இயற்கை பற்றிய விவரணை மிக நேர்த்தியாகவே செய்யப்பட்டுள்ளது.

இக்கதைகள் நீங்கிய ஏனைய கதைகளுள் 'இடைவெளி', கடந்துபோன காலங்களில் வேதனையோடு இழையும் மனதின் ஒரு 'நொஸ்ரலிஜிக்' தன்மையைக் காட்டுவதில் வெற்றி பெறுகிறது. 'நிழலும்' அவ்வாறே. பெயர்க்கப்படப் போகும் பலாமரம் பற்றிய விவரணை கலித்துவமாக வந்தமைகிறது. 'காற்றுக் கெல்லாம் பெய்கிற பழத்தல்கள்', 'வெய்யில் பூக்கும் வெள்ளை மணல்' போன்றவை இதற்கு உதாரணம்.

இவை போக எஞ்சிய கதைகளுள் 'மௌனங்கள்', 'அளத்தல்' 'இன்னொரு வெண்ணிரவு' போன்றவற்றை இத் தொகுதியில் இருந்தே அப்புறப்படுத்தியிருக்கவாம். ஏனைய கதைகளான 'தோல்வி', 'எட்டியது', 'மீறல்', 'அலுமாரி' 'ஏன்?' என்பவற்றை தொகுதியில் சேர்த்துக் கொண்டதால் தொகுதி இலக்கியக் கனதி கொண்டிருப்பதாக, நாம் கொள்ள முடியாது.

— திசைமுகன் □

திசையின் குறுநாவல்

3

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஒருரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சத் துயிர்ப்பிப்பாய் நீ
இப் பொன் நீ இம் மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ..... !

— தேவாரம்

சாராவை விட்டு அவள் விலகி வந்து விட்டாள், ஸாரா அக்காவை விட அழகி. ஸாராவுக்கு அவளிடம் பரிவு இருந்தது. ஸாராவுக்கும் அவளுக்கும் கல்யாணம் நடக்கும் என்றுநூன் எல்லாரும் நம்பினார்கள். ஆனாலும் அவள் விலகி வந்து விட்டாள். அப்வாறு நேர்ந்து விட்டது.

ஸாராவை அவள் முதன் முதலில் கண்ட போது அவளுக்கு பதினாறு வயதிருக்கலாம். பன்றிக்குட்டி கூட பதினாறு வயதில் அழகாகத்தானிருக்கும் என்பார்கள். ஆனால் ஸாரா பன்றிகளுக்குப் பிறந்தவளல்ல. ஒரு வேளை. மான்களுக்கும் மயில்களுக்கும் பிறந்திருக்கலாம். ஒவ்வொலெடுத்து ஆடும் அழகிய ஸர்ப்பங்கள் அவளுக்குப் பாலூட்டியிருக்கலாம். அவற்றின் கொடிய விஷம்தான் அவளது கண்களில் தேங்கி நிற்கின்றன போலும்!

அது ஒரு மாரிக்காலத்து இரவு. 'சொத சொத' வென்று நாள் முழுவதும் சிணுங்கியது மழை. அவள் அனேகமாகத் தோயத்தோய நனைந்துவிட்டு வந்தாள். மழையும் காற்றும் மின்சாரத்தை அடித்துக் கொண்டு போய் விடுகின்றனவா என்ன? மேசைமீதும், ஜன்னல் குறட்டின் மீதும் சில மெழுகு திரிகள் ஏற்றிவைக்கப் பட்டிருந்தன. அவை துளியும் துடித்தும் மங்கிய ஒளியமைகின்றன. ஆனால் அவற்றின் வெளிச்சங்கள் எப்போதும் அமைதியை மனதில் தூவவல்லன. சில ஒளியலைகளின் மேற் சிலபேர் மிக அழகாக ஜொலிப்பார்கள். அந்த மழை மணக்கின்ற இரவில், மெழுகுதிரிகள் உருகி ஒளியாய் வழிகின்றபோது, அங்கே உட்கார்ந்திருந்த ஸாரா அவனது மன அமைதியை அனேகமாகச் சாகடித்து விட்டாள். அவளது கண்கள் மிக அழகாகக் கொலை புரிந்தன. வெளியே மழை குமி விளாரிக் கொண்டிருந்தது. அவனோ, தனக்குள்ளேயே கரைந்து வழிந்து கொண்டிருந்தான்.

அவனது புலன்களில் ஸாரா மிக நுட்பமான அதிர்வுகளை மீட்டி விட்டாள். சில வேளைகளில் ஸாராவை அவன் கண்ட கோலங்கள் சாகவத்மானவை. இவி, ஸாராவைப் பற்றிய எண்ணங்களை அவனிடமிருந்து கழித்து விட்டால் ஒரு கூடு மட்டுமே மிஞ்சும் என்றுகிவிட்டது. அவ்வாறுகுமெவில் அவனது நிலைமை மிக அபாயகரமானதாகிவிடும் எனக், கிலேச முண்டாயிற்று. ஸாராவின்பால் ஈடுபாடு கொள்ளாதிருப்பதற்கும், அவளது ஆட்கொல்லிக் கண்களை மறப்பதற்கும், அவன் மிகவும் முயன்றான். சில விஷயங்களை மறப்பதற்கு எவ்வளவுதான் முயன்றாலும் அவை விடாப் பிடியாகத் நூற்துகின்றன. ஸாராவின் விஷயத்தில் அவ்வாறுகி விட்டது. ஸாராவை விட்டால் அவனது ஜீவிதத்துக்கு உரம் சேர்க்க வல்லவஸ்துக்கள் உலகில் இல்லை எனச், சில கணங்கள் அவனுக்குச் சொல்லின.

ஸாரா எப்படியாவது அவனுக்குத் தேவை!

எதற்கு?

அவனது உயிர்வாழ்தலுக்கு; இதுகூடப் புரியவில்லையா?

ஸாரா ஒரு பெண் விக்கிரகம். சரஸ்வதியைப் போல உடையணிவதற்கும், வீணையைமீட்டி இசை பெருக்குவதற்கும் ஸாராவை விடத்தகுதியானவள் இல்லை. அவனும் ஸாராவும் மட்டும் உலகில் வசிப்பார்களாம்! நவிர, சில இசைக்கருவிகளுக்கும், சில சிட்டுக் குருவிகளுக்கும் பெரிய மனது பண்ணி உலகத்தில் இடம் கொடுக்கலாம். அவள் உபாசகன். ஸாரா சரஸ்வதி. அவள் வீணையைப் பிழிந்து இசையாய் ஓட விடுவாள். இவ்வாறான மென்மையான, கவித்துவம் வாய்ந்த விஷயங்களை ஜீரணித்துக் கொள்ள உலகில் வேறு யாராலும் முடியுமா, என்ன?

ஆகவே, அவனும்.....ஸாராவும் ... சில இசைக்கருவிகளும் .....சில சிட்டுக் குருவிகளும் மட்டும்.

மேலே வானம், கீழே பூமி. அடிக்கடி மழை பெய்யும்.

பிரபஞ்சம் முழுவதும் இவற்றுக்குள் அடக்கம்.

சிட்டுக்குருவிகள் அவனது, இந்நிய்படியுள்ள விசுவாசமான பிரஜைகள். சற்றே முட்டாள் தனமானவைதான். என்றாலும் உற்சாக மானவை. காதல் செய்வதைத் தவிர அவற்றுக்கு வேறு வேலைகள் தெரியாதாம்!

சிட்டுக்குருவிகளுக்கு அவன் ஆணையிடுவான்!

எங்கே, கொஞ்சதூரம் உலவி விட்டு வரலாம். மழை பெய்கிறது. தெரிய வில்லையா? மழையில் நனையலாம். வாருங்கள், மழை எங்கிருந்து பெய்கிறது தெரியுமா? ஸாராவின் கூந்தலிலிருந்து!.....முட்டாள்களே, உங்களுக்கு இதெல்லாம் புரியுமா? கும்மா "குக்.....கொக்'' எனச் சந்தமிடத் தெரியும், சிறகுகளைக் கோதத் தெரியும், வான முகட்டில் 'ஜில்' வெனத் தாவத்தெரியும், வேறென்ன தெரியும்?

சாராவின் சங்கீதம் புரியுமா? வாருங்கள். அதோ ஸாரா!!

அவனுக்கு அந்நியமானவை. நிகழ்காலம் அவனைக் கைவிட்டுச் சென்றது. எதிர்காலம் அவன் முன் நின்று கேலியாக நகைத்தது. எல்லாவற்றிலின்றும் மீள்வதற்குத், தனக்குள்ளேயே பெரிய போராட்டமொன்றை நிகழ்த்த நிர்ப்பந்த முண்டாயிற்று.

எடை குறைந்தும், முகம் கறுத்தும், ஜீவசக்தி குறைந்தும்—ஒரு துடிப்பற்ற கிழவனைப் போலானான். அவனது 'முகமும் ஆன்மாவும் மெல்ல மெல்ல அழிய' ஆரம்பித்தன.

ஸாராவின் கல்யாணச் சேதியை மிக இலகுவாகவும், சலனமற்றும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதில், அவன் தீவிர அக்கறை காட்டினான். எனினும் உதடுகள் நடுங்குவதையும், உடல் சற்றே வியர்ப்பதையும், நெஞ்சு பொறுக்க மாட்டாமல் துடிப்பதையும் அவனால் தடுத்துக் கொள்ள முடியவில்லை. ஸாராவுக்குக் கல்யாணம் நடக்கிறது என்ற சேதியை, அவனால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

ஸாரா ஒரு கிறிஸ்தவனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாள்!

அவளது உச்சியில் யாரோ ஓங்கி அறைந்ததுபோல உணர்ந்தான்.

ஓ! இந்தப் பெண்கள்,..... பெண்கள்!.

சரஸ்வதியாக இருப்பதில் ஸாராவுக்கு விருப்பமில்லை. 'மேரி மக்தலேனா'வாகத்தான் இருக்க விருப்பமென்றாள், அவளால் என்ன பண்ண முடியும்?

அன்றிரவு, ஒரு விபரிக்க முடியாத மனநிலையில் இருந்தான்.

வெளியே காற்று மரக்கிளைகளைப் போட்டு உலுக்கியது. எதையோ வக்கிரமாகச் சொல்லியபடி அவனது அறைக்குள் நுழைந்து, நிலைகொள்ளாமல் சுழன்றது. கனத்த கருமிருட்டு அவன் மேல் கவிந்து, ஓரேயடியாக அமுக்கியது.

உடல் லேசாகச் சுட்டது.

வியத்தகு முறையில் திடீரென அவனைத் தூக்கம் அணைத்தது. ஆனால் நிம்மதியற்ற உறக்கம். ஏதேதோ முணுமுணுப்பதும், புரண்டு புரண்டு படுப்பதுமான ஸ்சாப் பனுவஸ்தையுடன் உழன்றான்.

4

சவரக்கத்தி கையில் ஆயத்தமாய் இருக்க
கண்ணாடியில் தெரியும் மனிதனை,
ஏளனமாய் நான் பார்க்கிறேன்.
அவரது தாடி எனதுகவனத்தைக் கோருகிறது;
நான்,
மீண்டும் ஒருமுறை அவரைக் கேட்கிறேன்:
'உயரத்திலுள்ள பட்டுப் பவிலியனிலமர்ந்த
மகாராணியை
வசியப் படுத்த
இளைஞனின் முட்டாள் துணிச்சலுடன்
இன்னுமேன் நீ காத்து நிற்கிறாய்?'

— ரொபேர்ட் ப்ரௌனிங்
தமிழில்: அ.யேசுராசா

ஆட்கொல்லி ரஞ்சிதமோர்

திடீரென விழிப்புத் தட்டிற்று. அதேகமாக ஆற்நச் சுடலைக்குருவியின் ஓலம் அவனைத் தட்டி எழுப்பியிருக்க வேண்டும். அவனது உச்சிக்கு நேரே அது பறந்தாற் போல இருந்தது. நிராதரவாகக் கூக்குரலிட்டபடி அது பறந்து போயிற்று.

சிறுவயதில் அம்மா சொன்ன கதையொன்று அவனுக்கு ஞாபகம் வந்தது. சுடலைக்குருவி ஒரு முவிவரின் தலையில் எச்சமிட்டு விட்டதாம். முவிவர் கோபம் கொண்டு "உனது இனை இரவிலில் காணுமல் போகக் கடவது. அதைத் தேடித்தேடி நீ இரத்தம் கக்கி இறந்துபடக் கடவாய்!'' எனச் சபித்தாராம். அன்றிலிருந்து இரவு நேரங்களில் தன் வினையைத் தேடிச் சுடலைக்குருவி ஓலமிட்டுக் கூவி அழைத்தவாறே ஊரூராகப் பறக்குமாம். அதன் ஒவ்வொரு கத்தலுக்கும் ஒவ்வொரு துளி இரத்தம் சிந்துமாம். அப்படியே இரத்தம் சிந்தச் சிந்த அது பறந்து போய் ஒரு சுடலையில் விழுந்து உயிர் விடுமாம்.

அந்தக் கதை உண்மையோ, பொய்யோ; ஆனால் அதன் கூக்குரலில் இரத்தம் தெறிப்பதை அவன் அக்கணத்தில் உணர்ந்தான். அனுபவங்கள் தரும் படிப்பினையைப் பற்றி அக்கா சொல்வது சரிதான் போலும்! இப்படியான ஒரு மௌடீகச் சோகம் அவனுக்கு வாய்த்திருக்காவிட்டால், அந்தத் தூர்ப்பாக்கியம் கிட்டிய குருவியின் ஓலத்தை, அவன் அனுதாபத்துடன் செவி மடுப்பானா, என்ன?

அந்தக் குருவி ரொம்பவும் பாவம். அது இரத்தம் கக்கிச் செத்துப் போய் விடுமோ?

குருவியே! நீ செத்துப் போய் விடாதே. துன்பங்களும் இழப்புக்களும், உலகில் ஜீவராசிகள் தோன்றியவுடனேயே பிறந்து விட்டன. தாங்கிக் கொள். மீண்டு, வெளியேறு. வாழ்க்கை வாழ்வதற்குத் தான்; இறந்து படுவதற்கல்ல. இன்னும், உலகில் எத்தனையோ இன்பங்கள் உள்ளனவே! அவற்றுக்காக இன்னும் ஏழு முறை பிறக்கலாம். குருவியே, நீ செத்துப் போய் விடாதே!

சற்றுத் தூரத்தேயிருந்து ஒரு நாயின் குரைப்பொலி

(9ஆம் பக்கம் பார்க்க)

ஆட்கொல்லி...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருள் நடவிய காற்றில் மிதந்து வந்தது. அந்த ஒலியில் ஒரு முடியையே இருந்தது. ஒரு அணுதைக் குழந்தை சிணுங்கி அழுவது போலக் கேட்டது.

பகலில் அது நிறையச் சண்டை போட்டது என அவள் கற்பனை பண்ணிக் கொண்டாள். ஒரு பெட்டை நாயின் காரணமாக, ஒரு வற்றலான பலங்குன்றிய நாயை அது கடித்து விரட்டிற்று. பெட்டை நாயைத் தொடர்ந்து வேட்கையுடன் ஓடிக் கொண்டிருக்கையில், அதனினும் பெரியதும், மூர்க்கத்தனமானதுமான இன்னுமொரு நாய் அதனைப் புரட்டிப் புரட்டிக் கடித்து ஓட விரட்டி விட்டது. அந்தப் பெட்டை நாயோவெனில், ஆரம்பமுதலே அதற்கு ஆசை காட்டுவதும், பிறகு வாலைப் பின்னங்கால்களுக்கிடையே நுழைத்துக் கொண்டு முரண்டு பண்ணித் தூர ஓடுவதுமாக, அதனைப் படாதபாடு படுத்திவிட்டது. இந்த நாய் கடிவாங்கியவுடன் பெரிய நாயுடன் அது இணைந்துவிட்டது. அதை முகர்ந்து பார்த்து, சிணுங்கிய குரலில் அது சல்லாபமொழி பேசி தனது அன்பைத் தெரிவித்தது. இவற்றையெல்லாம் நினைக்கையில் பரிதாபத்துக் குரிய நாய்க்குக் கோபம் முட்டிற்று. அதைவிட அவமானம் பொங்கிற்று. ஏமாற்றத்தால் அதன் இதயம் வீங்கிக் கனத்தது. அதைப் போக்க எண்ணி வான்நோக்கி முகத்தை நிமிர்த்தி, நீளக் குரலெடுத்து அது ஊளையிட்டழுதது.

"ஊஊ . . . . . வ்வ்"

அடடஎன் அசட்டு நாய்க் குட்டியே! பெட்டைநாய்களுக்கா பஞ்சம். நாளை உனது நாள். அழாதே, என், அசட்டு நாய்க் குட்டியே!

சற்றே நிறந்து கிடந்த யன்னலினூடு அவள் வெளியே பார்த்தாள். கருங் கும்மென ஒரேயிருள். மரக்கிளையொன்று இருளில் முக்குளித்தது மிக மங்கலாகத் தெரிந்தது. இருளில் கையைத் துழாவி எதையோ தேடும் குருட்டுக் கிழவியோல அது குலுங்கிற்று.

காலையில் அது ஒரு அழகிய மலரை ஈன்றது என அவள் கற்பனை பண்ணிக் கொண்டாள். பெருமையுடன் தலைக் கனமும் சேர, காற்றுடன் அது விரும்பப் பேசிற்று. மாலையானதும் பூ உலர்ந்தது. சமயம் பார்த்திருந்த காற்று வீம்புடன் உரக்க விரிப், பூவைக் காம்பினின்றும் ஒடித்துத் தரையில் விழுத்திப் பழி வாங்கி விட்டது. மரக்கிளையோவெனில், மிகத் துக்கித்துப் பூவைத் தேடித் தேடி இருளில் கைநீட்டித் துழாவுகின்றது. அது அகப்படாமல் போகவே விசனத்துடன் 'சட பட'வென விரல்களை முறித்தது. 'உஸ்' எனப் பெருமூச்செறிந்து ஏங்கிற்று.

மரக்கொப்பே! மட மரக் கொப்பே! இன்னுமொரு மலர் பூக்கும். காலையில் நீயே பார்க்கலாம். ஆனாலும் பூக்கள் நன்றி கெட்டவை. கும்மை ஈன்ற மரத்தினின்றும் விரைவில் பிரிந்து விடும். கடைகெட்ட மங்கையரின் கூந்தலில் அவை குஷாலாக உட்கார்ந்து கொண்டு ஏமாளி ஆண்களைப் பார்த்துக். கேலியாகப் பல்லைக் காட்டும். இதுதானப்பா உலகம்! மரக் கொப்பே, நீ உருகாதே! நாளை இன்னுமொரு பூ கிடைக்கும். அதுவும் விரைவில் உதிரும். ஆனால் மறுபடி அடுத்த தினத்தில் பூக்குமே! அதற்காகவே நீ நித்திய ஜீவியாயிரு. இருளில் கிடந்து புலம்பாதே! காலையானதும், சூரியன் இருளை அடித்துத் துரத்தியதும், நீ பழையபடி காற்றுக்குச் சவால் விடுக்கலாம்.

சேவல் ஒன்று கூவிற்று. கொஞ்சம் நடித்த அடிக்கட்டைச் சுருதிக் குரல் அதற்கு. மவிதர்களைத் துயில் எழுப்புவதற்காகத்தான் சேவல் கூவுகிறது என, முட்டாள்களே சொல்வார்கள், சேவல் கூவுவது, பேட்டுக் கோழிக்குத் தனது வீரியத்தைப் புலப்படுத்துவதற்குத்தான்! தலையை நிமிர்த்தி, வெந்த கொண்டை பதற, உடலை விறைப்பாக முறுக்கி, நிறகுகளைப் 'படபட'வென ஒலி செய்து, கூரலகுகளை விரியத் திறந்து, சேவல் தனது வீரப் பிரதாபங்களைப் பேட்டுக் கோழிகளுக்கு முன்னால் அளந்து கொட்டியது.

"கொக்கரக்.....கோ ஓ!..."

சேவலே, கவனமாய் இரும் ஐசே! நீர் ரொம்ப மோசம். உம்மை விட அழகான துடியான இளங்சேவல் ஒன்று அகப்படுமானால், உனது எஜமானனுக்கு, இருந்தாற்போல உமது மாமிசத்தை ருசிப்பதில் பெருவிருப்பமுண்டாகும். உமது கழுத்தில் சுருக்கு இறுகும்போது, உமது பிரிய சகிகளான பேட்டுக் கோழிகள் கழிச்சட்டிக்குள் விழப் போகின்றனவா? சேவலே, அட என் மக்குச் சேவலே! அவற்றுக்குப் புதியபொலி சேவல் கிடைக்கும். கவனமாய் இரும் ஐசே! கூவாதீர்..... கூவாதீர்.....சே, நீர் ரொம்ப மோசம்.

குயில்கள் மதுரமாகப் பாட்டிசைக்க ஆரம்பித்தன. பறவைகளிலே மூடத்தனம் நிரம்பியவை இந்தக் குயில்கள் தான். அவற்றுக்குக் கூடு கட்டத் தெரியாது. கண்மூடித்தனமாகக் காதல் மட்டும் செய்யத் தெரியும். பிறத்தியாவின் கூடுகளில் அசட்டுத்தனமாய்ப் போய் உட்கார்ந்து முட்டையிடும். பிறகு, அவற்றின் குஞ்சுகளைக் காகங்கள் கொத்திப் பிடுங்கும்; விரட்டியடிக்கும். அசட்டுக் குயில்களோ, அப்போதும் மாமரச் சோலைகளில் பாடிப் பாடிக் காதல் புரியும்.

குயிலே, கானக் கருங்குயிலே! காதலை விடவும் முக்கியமான பல விடயங்கள் உலகத்தில் உண்டே. காதலுக்காக மட்டும் சோக ரசம் பொங்கக் குரலிழைத்து உயிரை விட்டு விடாதீர் கனவானே!

மெல்ல மெல்ல இருள் கரைய ஆரம்பித்தது. சூரிய தேவன், இருளுக்கு செம்மையாக அடி கொடுக்க ஆரம்பித்து விட்டான். இருள் பின் வாங்கி ஓடி முற்றாக மறைந்து விட்டது. காகங்களுக்கெல்லாம் இதைப் பார்த்ததும் கும்மா இருக்க முடியவில்லை. இருளைப் பார்த்து நையாண்டியாகக் "கா ...கா" எனக் கர்ணகடூரமாக முழங்கின. உதயத்தை நோக்கித் தொழுவன போல இறக்கைகளைப் "படபட" வென அடித்துத் தமது சவட்டைக் கால்களால் ஒய்யாரநடை பழகின.

சூரியப்பயலே, நீ அதிர்ஷ்டசாலிதான். ஒண்ணும் நம்பர்க்காரனுச்சே! உனக்கொரு விசுவாசமான காதலி இருக்கிறாள். உன் முகம் கண்டதும், தானும் மலர்கிறாள். நீ போகும் பாதையெல்லாம் விழியால் தொடர்கிறாள். நீ மறைந்தபிறகோ ஒரு விதவைப் பெண்ணே போன்று களையிழந்து முகத்தைத் தொங்கப் போட்டு விடுகிறாள். உன்னைப் பார்த்தாலே எனக்கும் பொறாமையாக இருக்கிறது. சூரியப் பயலே, நீ அதிர்ஷ்டசாலிதான்.

வெளியேயிருந்து 'தள தள' எனத் தண்ணீர் தெளிக்கும் சத்தம் கேட்டது. அது யாரெனப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அவனது பிடரைப் பிடித்துந்தியது. எழ முயற்சித்தான். அவனது பலத்தை எல்லாம் படுக்கை உறிஞ்சி விட்டதோ, என்னவோ? எழ முடியவில்லை. தலை ஈயக்குண்டெனக் கனத்தது. கவர்கள் இடம் நகர்ந்து திரிய ஆரம்பித்தன. தரையாவெனவில், 'ஸ்லோமோஷனில்' மேற்நோக்கி விழுந்தது. அட, அவனது பலம் எல்லாம் எங்கே போயிற்று. அவனும் வலுவற்றவன் ஆகிவிட்டானா?

வ னு வுள் ள வ தா னே வாழும்!

டார்வின் சொல்லிவிட்டுப் போக, இத்தனை காலமும் கற்றுக் குட்டிகள் அதை வெற்றுச் சுலோகமாயிசைத்து வந்திருக்கிறார்கள். ஆனால், வலுவற்றவை எல்லாம் ஒன்று தீரண்டு ஒரு பெரும் வலுவாகிவிட்டாலோ, ... ! அப்போ பெரிய பிரளயமல்லவோ நிகழும்; உலகமே தலை கீழாக மாறி விடும். டார்வின் அவர்களே, தங்களது இந்தக் கூற்று முட்டாள்தனமானதும், படு பிற்போக்கானதும் எனச் சொல்வதில் சற்றே நாணுகிறேன்,

(தொடரும்)

சாத்தானின் விளையாட்டுகள்

சாத்தான் ஏன், எவ்வாறு நரகத்திற்குத் தள்ளப்பட்டான் என்பதை இறிஸ்தவர்ளும் இறில்தவர் அல்லாதவர்களும் அறிவர்.

இந்தியாவில் பிறந்து, இப்போது பிரித்தானியப் பிரஜையாகவுள்ள சல்மான் ருஷ்டி, சாத்தானின் செய்யுள்கள் என்ற நாவலை எழுதி, உயிர் பறிபோகப்படக்கூடிய அளவிற்கு பிரச்சினையில் மாட்டிக் கொண்டதன் பின்னணி எத்தனை பேருக்குத் தெரியும்?

வரலாற்றில் சிறப்புப் பட்டதாரியான ருஷ்டி, இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவர்.

மும்மது நபி(ஸல்) அவர்கள் தமது 'ஒன்றே தெய்வம்' என்னும் புதிய மதக்கோட்பாட்டை முன்வைத்தபோது, பல தெய்வங்களை வணங்கும் (Polytheistic) பழைய மதக் கோட்பாடுகளையும் ஏன் வாங்கி, இந்தப் புதிய மதக் கோட்பாடு உருவாக்கப்பட்டால், அது (புதிய மதக்கோட்பாடு) ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஏதுவாயிருக்கும் என அன்று ஆலோசனை கூறப்பட்டதாகவும், அதற்கேற்ப சில செய்யுள்கள் சேர்க்கப்பட்டு, பின்னர் சாத்தானின் உந்துதலால் அவை உருவாகியவை என நிராகரிக்கப்பட்டதாகவும் சல்மான் ருஷ்டி கூறுகிறார்.

நிராகரிக்கப்பட்ட இச் செய்யுள்களே தனது நாவலின் மையம் என ருஷ்டி கூறுகிறார்.

இதுவும் தற்போது பிரச்சினைகளில் மாட்டுப்பட்டு, ஆப் பிழுத்த குரங்கின் நிலையில் ருஷ்டி உள்ளார்.

— ராஜசேகரன் □

இந்தியப்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

"சாத்தானின் செய்யுள்கள்" நூலைப் பொறுத்து நீங்கள் எடுக்கவிருக்கும் முடிவு உலகுக்கு உண்மையை உணர்த்தும். நீங்கள் தடையை உறுதி செய்தால், நானும் பிறரும் மோசமான முடிவுக்கு வர வேண்டியிருக்கும். ஒரு வேளை, உங்கள் அரசின் தவறை உணர்ந்து, அதை நீக்க நடவடிக்கை எடுத்தால் அச்செயல் சிறப்புடையதாக அமையும். அதனைப் பாராட்டும் முதல் ஆள் நானுகத் தான் இருக்கும்.

தங்கள் உண்மையுள்ள
சால்மன் ரஷ்டி
('ஹிந்து, (Hindu) ஒக்டோபர் 13, 1988) □

1947ஆம் ஆண்டு பம்பாயில் பிறந்த சால்மன் ரஷ்டி உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர். தற்போது இலண்டன் நகரத்தில் வாழ்ந்துவரும் ரஷ்டி, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய வரலாறு படித்தார். இவர் எழுதியநாவல்கள் : 'கிரைமஸ்' (Grimus), 'இரவின் பிள்ளைகள்' (Midnight's Children), 'வெட்கம்' (Shame). 'இரவின் பிள்ளைகள்' 1981ஆம் ஆண்டுக்கான 'புக்கர்' பரிசைப் பெற்றது. அண்மையில் இவர் எழுதிய 'சாத்தானின் சய்யுள்கள்' (Satanic Verses) இந்திய அரசால் தடை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பும் மொழிபெயர்ப்பும் : சலபதி
நன்றி : காலச்சுவடு

மின்னிவிப் பூச்சி உட்கார்ந்தும் போது மின்னுவதில்லை: மவிதன் சோம்பேறி ஆகும் போது அவனது புத்தி என்ற தீபம் அணைகிறது.

எல். ஏ. சந்தன்

முடிந்த தேர்தல்:
வட,கிழக்குக்குவழிகாட்டுமா?

(சென்ற வாரத் தொடர்ச்சி)

"ஈழத்திர" இலங்கையின் அரசியல், இனப்பிரச்சினையால் மையம் கொண்டது. குறிப்பாக 1977-ஆம் ஆண்டு பதவிக்கு வந்த யு. என். பி அரசு இனப்பிரச்சினையை அடித்தளமாகக் கொண்டு தனது அரசியல் அதிகாரத்தைத் தொடர்ந்து ஒரு தசாப்தத்திற்கு மேலாவ் விஸ்தரித்துக் கொண்டது. இதற்கு முன்பிருந்த ஆளும் கட்சிகளும் இதே மார்க்கத்தைக் கடைப்பிடித்த போதிலும் கடந்த தசாப்தத்தில் இது உச்சநிலையடைந்தது. சேர் பொன் இராமநாதன் காலம் தொடட்டு இற்றைவரையுள்ள தமிழத் தலைமைகளின் தூரநோக்கின்மையும், பொறுப்பற்ற நடவடிக்கைகளும் இவ்வாறு தமிழ் மக்கள் பலிக்கடாவாக்கப்படுவதற்கான வாய்ப்புக்களை மேலும் கொடுத்தன.

இந்துசமுத்திரத்தில் ஒரு முத்து என்று வர்ணிக்கப்பட்ட இலங்கைத்தீவு யு. என். பி ஆட்சியில் இந்துசமுத்திரத்தில் ஓர் இரத்தத்துளியாகியது. யு. என். பி யின் இரத்தக் களரி மிக்க ஆட்சியின் 'தளமாகவும், பரிசோதனைக் களமாகவும் தமிழப் பிரதேசம் ஆக்கப்பட்டது. இத்தகைய இரத்தம் தோய்ந்த மண்ணில் இத்தேர்தல் நிகழ்ந்துள்ளது. நாடாளுமன்ற ஆசனங்களை நிரப்புவதற்கான ஒரு தேர்தலாக இதனைப் பார்ப்பதுவிட தாம் எதிர்நோக்கும் நமது நெருக்கடிகள் பற்றிய தமது மனநிலையையும் விருப்பத்தையும் வெளிப்படுத்தும் ஒரு தேர்தலாகவே தமிழ் மக்கள் இதனைக் கையாண்டுள்ளனர் என்பதை நாம் முதலில் விளங்கிக் கொள்ளவேண்டும். அதாவது தம்முடைய நோக்குநிலை சார்ந்த விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்தும் சாதனமாக இத்தேர்தலைத் தமிழ் மக்கள் பார்த்தார்களே அன்றி நாடாளுமன்ற நிறுவனத்தில் ஓர் அங்கமயமாதல் என்ற எண்ணத்தில்லல். எனவே நாடாளுமன்றம் என்ற எண்ணக்கருவே தமிழ் மக்களிடம் இத்தேர்தலில் இருக்கவில்லை. இந்த நோக்கினை புரிந்துகொள்ளாது விட்டால் தமிழ் மக்களின் அரியல் அபிலாசைகளைத் தீர்த்தற்கான திட்டமிடல் எதனையும் மேற்கொள்ள முடியாது. இந்தவகையில் தீவுக முழிய நாடாளுமன்ற நிறுவனத்துக்கான தேர்தல் என்ற நோக்குநிலையில் இருந்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிகழந்த தேர்தல் நோக்குநிலை வேறானது.

முழுநேர அரியல்வாதிகளாயில்லாத பகுதிநேர அரசியல் வாதிகளே தமிழ் மக்களின் அரியற் தலைவர்களாய் இருந்துள்ளனர். முழுமையப்படுத்தப்பட்ட அரியற் பார்வையோ அல்லது அறிவியற் கண்ணோட்டமோ இல்லாது அவ்வப்போது நாடாளுமன்ற தேர்தலுக்கு முகம் கொடுக்கும் உணர்ச்சிவசப்பட்ட அரியல் நோக்கே காலம் காலமாய் தமிழ் மக்களுக்கு இருந்து வந்தகது.

தமிழரசுக் கட்சியிலிருந்து பிரிந்து தமிழர் சுயாட்சிக் கழகம் எனும் ஸ்தாபனத்தை ஆரம்பித்த நவரத்தினத்துடன் 1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தற் காலத்தில் புளியங்கூடல் எனும் இடத்தில் அ. அமிர்தலிங்கம் பிரசங்க விவாதத்தில் ஈடுபட்டார். அப்போது 'நவரத்தினத்தை எதிர்த்து அமிர்தலிங்கம் வாதிடுகையில் தனி நாடு கோருபவன் பைத்தியக்காரன் என வர்ணித்திருந்தார். இவ்வாறு கூறிய அமிர்தலிங்கம் 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் நியாகராசாவால் வட்டுக் கோட்டைத் தொகுதியிற் தோற்கடிக்கப்பட்ட பின்பு வீராவேசத்துடன் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து நிராமம் நிராமமாக மனோ சுதிம் பிரசாரத்தில் ஈடுபட்டார். தன்மானத் தமிழினம் தலைநிமிர்ந்து வாழ்வதற்கும் தமிழீழம் அமைப்பதுதான் ஒரே ஒரு வழி என்று மேடைகளில் முழங்கினார். இதற்கு நேர் எதிர்மாறான கொள்கையை இத்தேர்தலில் அமிர்தலிங்கம் முன்வைத்தபோது அரையும் அவரது சகாக்களையும் தமிழ் மக்கள் தலைகுனியவைத்துள்ளனர்.

1970ஆம் ஆண்டுத் தேர்தலில் "தனி நாடு பயித்தியக் காரத்தனமானது". 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் "தமிழீழம்தான் ஒரே ஒரு தீர்வு," 1989ஆம் ஆண்டுத் தேர்தலில் "தமிழீழமல்ல; மாகாண சபைதான் தீர்வு" என்ற கொள்கைளை அமிர் ஒன்றுக்கொன்று நேர் முரணாக காலத்திற்குக் காலம் மாற்றி முன்வைத்தார். இத்தகைய போக்குமிக்க இவரது தலைமைத்துதத்தை தமிழ் மக்கள் இத்தேர்தலில் முற்றாக நிராகரித்துள்ளனர். உதய சூரியன் சின்னத்தின் கீழ் த.ஐ.வி.மு. ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, ஈ. என். டி. எல். எவ், என்பவைற்றின் நாற் கூட்டணி ஒரு புறமும், கயேட்சைக் குழுவாக ஈரோஸ் மறுபுறமும் நின்று இத்தேர்தலிற் போட்டியிட்டன. இதில் நாற்கூட்டணிக்கு 1,88,593 வாக்குக்களும், ஈரோஸிற்கு 2,29,869 வாக்குக்களும் கிடைத்தன. இத்தேர்தலில் அமைதி, ஜனநாயகம், புனருத்தாரணம் என்னும் கொள்கையை நாற் கூட்டணி முன்வைத்தது. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை திருத்துதல், தமிழப் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுதல், தமிழ்பேசும் மக்களே ஒன்றுதமுழிய தேசிய மாநாட்டைக் கூட்டி ஒரு காட்டியுள்ளனர். ஆதலினால் சம்பந்தப்பட்ட சகல சக்திகளும் தக்க அரசியல் நிர்மானத்தை ஏற்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பாடுபட வேண்டும். அரசியற் கொலைகள் சனத்தொகையைக் குறைக்கத்தான் உதவுமே தவிரப் பிரச்சனைகளைத் தீர்க்கப் போவதில்லை.

நடந்து முடிந்த தேர்தலில் கட்சிகளின் நாடாளுமன்ற ஆசனங்களை நோக்குமிடத்து தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குள் தமது பலத்தைப் பிரயோகித்து தமிழ்பேசும் மக்களின் நலன்களை நிலைநாட்டுவதற்கான வாய்ப்பு பொதுதமாக ஆதிக்கம் செலுத்தக் கூடிய சக்திகளாக முஸ்லிம் கொங்கிரஸ், மிலக்கை அரசு, இந்தியமத்தியஅரசு, ஈரோஸ், எல். ரி. ரி. ஈ. என்பன நேரடியாகவும், தமிழக அரசு அமுக்க சக்தியாகவும் காணப் படுகின்றன.

இன்று காணப்படும் அரசியற் சூழல் இவ்வாண்டுள் இறுதிக்குள் அதிக மாற்றமடையக் கூடிய சாத்தியக் கூறுகளைக் கொண்டுள்ளன.

1) ஏற்கனவே தமிழக அரசியல் மாறியுள்ளது. (நி. மு. க. தலைமை)

2) ஈரோஸின் தேர்தல் வெற்றி மாகாண அரசிற்கிருந்த அங்கீகாரத்தை சற்று பலவீனப் படுத்தி உள்ளது.

3) தென் னிலங்கையில் குழப்பங்கள் அதிகரித்து வருகின்றன.

4) இந்தியாவில் வி. பி. சிங் தலைமையிலான எதிர்க்கட்சி தேசிய முன்னணி செல்வாக்குப் பெற்றுவருகிறது.

எனவே ஒரு வித்தியாசமான அரசியற் சூழல் ஏற்படத் தொடங்கியுள்ளது. இதனால் இவ்வாண்டு முடிவதற்குள் குறிப்பிடக் கூடியளவு பெரிய அரியல் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புண்டு.

சனத்தொகைக் குறைப்பு நடவடிக்கைகளே சகல தரப்பினரும் நிறுத்தி தமிழ் மக்களின் அரசியல் நிர்மானத்தைப் பேணுமாறு தமிழ் மக்கள் புள்ளடியிட்டுள்ளனர். தமிழ் மக்களின் இந்தச் செய்தியை சகலரும் செவிமடுப்பார்களா?

கணநாதன்

வடக்கு, கிழக்கு ...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நுட்ப உத்திகள் பயன்படுத்தப்படலாம். அவற்றுள் சில பின் வருமாறு:

1. பாதுகாப்பாக நீண்டகாலம் வைத்திருக்கக் கூடியகளஞ்சியங்களை உருவாக்குதல். (மெழுகு பூசுதல் போன்ற நுட்பங்கள் மூலம் பாதுகாப்பளித்தல்)

2. உறையச்செய்வது அல்லது இரசாயனப் பாதுகாப்புச் செய்வது.

(உ-ம்: பழங்கள்: பழச்சாறு, பழக்கூழ் வடிவிலோ, பல்வேறு வகைப் பழம் பானங்களாக உருமாற்றியோ பாதுகாக்கலாம்)

3. ஊறவைக்கும் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துதல்.
(ஊறுகாய்)

4. உலர்த்துவதன் மூலம் பாதுகாத்தல்.
(வற்றல் போடுதல்)

மேற்படி பாதுகாப்புமுறைத் தொழில் நுட்பங்கள் பல்வேறு நாடுகளில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளன. அவற்றினைப் பின்பற்றி எமது பிரதேசத்திற்கு ஏற்றதான பொருத்தமான தொழில் நுட்ப முறைகளைப் பின்பற்றி உணவுபதனிடல் தொழிற்றுறையை விரிவாக்குதல் வேண்டும். எமது பிரதேசத்தில் பேணிப்பாதுகாத்து சந்தைப் படுத்தக்கூடிய பழங்களென மாம்பழம், பலாப்பழம், தக்காளி, பப்பாளி, எலுமிச்சை, தோடை, விளாம்பழம், வாழைப்பழம், பனம்பழம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை எவ்வழிகளில் பாதுகாத்தல் லாபகரமான தென்பதற்கு ஆய்வுகள் அவசியம். ஒவ்வொரு பழவகையின் பாதுகாப்புப்பற்றியும் தனித்தனி ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும். பாதுகாத்துப் பயன்படுத்துவது லாபம் தரத்தக்கதுதான் என்பதை நிச்சயித்தபின்னரே இம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பழச்சாற்றினை அடிப்படையாகக் கொண்ட விவசாயத் தொழிற்றுறை உற்பத்திகளில் பானங்கள், தகரத்தில் அடைக்கப்பட்ட பழச்சாறுகள், நெக்டர் போன்றன உடனடியாகப் பருகத்தக்கவையாகும். பழக்கூழினை அடிப்படையாகக் கொண்டவற்றில் ஜாம், ஜெலி, சட்னி, பழக்குழம்பு என்பனவும் முழுதாக அல்லது வெட்டப்பட்ட பழங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளில் தகரத்தில் அடைக்கப்பட்ட பழவகைகள், ஊறுகாய் வகைகள் என்பனவும் அடங்கும். எமது பிரதேசத்திலுள்ள பல நிராமங்களிலே சில பருவங்களின் போது பழங்கள், காய்கறிகள் பெருமளவு உற்பத்தியாகின்றன. தேவைக்கதிகமான இப்பருவகால உற்பத்திகளில் பெரும் பங்கினம் வீணடிக்கப்படுகின்றன. பருவகாலமற்ற காலங்களில் இவை அருமையாகவுள்ளதால் அதிக விலையாக உள்ளன. எனவே மேற்படி உற்பத்திகளின் நிரம்பலை ஒழுங்குபடுத்துவதற்கு, பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துவது இன்றியமையாததாகும். இதற்குப்பொருத்தமான மலிவான பாதுகாப்புத் தொழில் நுட்ப முறைகளை விருத்தி செய்தல் அவசியம். இயற்றுக்கான பல ஆய்வுகளும், செய்திட்டங்களும், விரைவில் மேற்கொள்ளப்படுதல் நற்பலனை விளைவிக்குமென லாம்.

பொதுவாக எமது பிரதேச விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் அதே நேரத்தில், அவ் உற்பத்திகளை அதிக வருமானம் தரத்தக்கவையாக நவீனத்துவம் கொண்டவையாக மாற்றுவதற்கு விவசாயத் தொழிற்றுறை விரிவாக்கம் பற்றி நாம் அதிகம் நிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஒரு நாடோ ஒரு பிரதேசமோ ஒரு நிராமமோ அபிவிருத்தியுறுவதற்கு மேற்படி அபிவிருத்திக்குரிய வழிமுறை சுருக்கமான தந்திரோபாயமாகுமல். ஒரு விவசாயஉற்பத்தியை சில செயல்முறைக்குட்படுத்தி வேறோர் உற்பத்தியாக அல்லது பலவாக மாற்றுதல், அவ் உற்பத்திகளை இன்னமும் சில செயல்முறைக்குட்படுத்தி இன்னும் பலவாக மாற்றுதல் போன்ற தொழில்நுட்ப நடவடிக்கைகளை விவசாயத் தொழிற்றுறை விரிவாக்கத் தின் பரிணாமமாகும். இதன் விளைவாக அதிக வருமானம் லாபம் கிடைப்பதோடு வேலை வாய்ப்புகளும் அதிகரிக்கும். எனவே விவசாயப் பொருளாதார அபிப்பாடையிலான நாடுகள் விருத்தியுறு மேற்படி அபிவிருத்திற் றிறமுறையின்பால் அதிக அக்கறையும், ஆர்வமும் காட்டவேண்டும்.

நன்றி: யாழ்ப்பாணப் புலியிலலானஃ □

கொல்வின் - ஓர் அரைப்புரட்சியாளர்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தெளிவான கண்ணோட்டமும், தீர்க்கதரிசனம் மிக்க பார்வையும் கொண்டவராக கலாநிதி கொல்வின் காணப்பட்டார். புரட்சிகரமான பண்புமிக்கவராக தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்த இவர் ஒரு சந்தர்ப்பவாதியாக பிற்காலத்தில் மாறினார்.

இலங்கையின் மார்க்சிய முன்னோடிகளில் இவரும் ஒருவர். இலங்கை பெருமைப்படத்தக்க ஒரு அறிவாளியும் போராளியுமாய் இருந்தவர். ஆனால் தனது போர்க்குணத்தை இடையில் வெம்பலாக்கி அவரப் போராளி என்ற பெயரிற்கே தன்னை உரித்தாக்கியுள்ளார்.

1961ஆம் ஆண்டு வரையிலான இவரது பணியை தமிழ் பேசும் மக்கள் ஒரு போதும் மறந்திட முடியாது. தமிழ் மொழிக்கு சிங்களத்துடன் சம அந்தஸ்து கொடுக்கவேண்டுமென தமிழ்த் தலைவர்களையும்விடத் தீவிரமாகக் போராடியவர்.

1955-ஆம் ஆண்டு இவர்து கட்சி தமிழும் சிங்களமும் உத்தியோக மொழியாக வேண்டுமென்ற மகேசாதாவை பாராளுமன்றத்திற் சமர்ப்பித்தது. அந்த மகேசாதாவைச் சமர்ப்பித்து என். எம். பெரேரா ஆற்றிய உரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அப்போது என். எம். பின்வருமாறு எதிர்வு கூறினர். "தமிழும் உத்தியோக மொழியாகத் தவறினால் தமிழர்கள் பிரித்து இனவாரசமைக்க விரும்புவர். தமிழருக்குப் பொருளாதாரப் பலம் போதாததால் தவிர்க்க முடியாத நிலையில் இந்தியாவுடன் ஒரு மாநிலமாக இணைவர்." என். எம். இப்படி எளிக்கியும் இனவாதிகள் அதனை ஏற்கவில்லை. இறுதியில் மகேசாதா நிறைவேறவில்லை.

இதன் பின்பு கொல்வினும் அவரது கட்சியினரும் பாராளுமன்றத்திற்கு வெளியே சமஅந்தஸ்துக் கோரிப் போராடினர். 1955ஆம் ஆண்டு சம அந்தஸ்துக் கோரி பொதுக் கூட்டங்கள் நடாத்தினர். அப்போது இக்கட்சியினர் சிங்களக் காடையர்களினால் பல மாகத் தாக்கப்பட்டனர். இவர்களது கூட்டத்தில் கைக்குண்டு வீசப்பட்டது. தமிழ் மொழிக்காக முதலில் இரத்தம் சிந்தியவர்கள் லங்கா சமசமாஜக் கட்சியினரே. இக்காலத்தில் இலங்கைக் கொம்யூனிஸ்ற் கட்சியும் மொழி விடயத்தில் இதே நிலைப்பாட்டைத்தான் கொண்டிருந்தது.

1956ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா தனிச்சிங்களச் மகேசாதாவை பாராளமன்றத்திற் கொண்டுவந்தபோது

துரை. குருபரன்

கொல்வின் பின்வருமாறு கூறினர். "மொழி ஒன்றெனில் நாடு இரண்டு; மொழிகள் இரண்டெனில் நாடு ஒன்று." அப்போது என். எம். பின் வருமாறு கூறினர்: தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்படுவதன் விளைவை இந்த நாடு 25 வருடங்களில் அனுபவிக்கும். அது இரத்தம் தோய்ந்த துயரமாகவே இருக்கும். இவ்வாறு சமசமாஜிகள் தீர்க்கதரிசனம் மிக்கவர்கள். முன்கூட்டியே அதனை எச்சரித்தனர். அந்த வகையில் கொல்வினுக்கும் ஒரு முக்கிய இடமுண்டு.

ஆனால் 1961ஆம் ஆண்டிலிருந்து இவர்கள் தமது கொள்கையில் உறுதி தளர்த்தனர். இனவாதக் சகதிக்குள் இவர்களும் பலியாகினர்.

1970ஆம் ஆண்டு சி.ல.சு.க. வுடன் கூட்டுச் சேர்த்தனர், அம்மையாரின் கட்சியை நல்ல முற்போக்கு எண்ணம் கொண்ட சோஷலிசக் கட்சியாக மாற்றுவதற்காக அதனுடன் கூட்டுச் சேர்வதாகக் கூறினர். ஆனால் மாற்றப்போய் இவர்கள்தான் மாறிப்போயினர். பன்றியோடு சேர்ந்த பசு பன்றியின்பழக்கத்தைத் தான் கற்றதேயல்லாமல் தனது பழக்கத்தை பன்றிக்கு கற்பிக்க முடியாத நிலை நான் இவர்களுடையது.

சுமசமாஜிகள் 1961 வரை மொழிப்பிரச்சினையிற் சரியாக நடந்து கொண்டனர். ஆனால் இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமான இவர்களது நிலைப்பாடு சரிவர மதிப்பிடு செய்யப்பட வேண்டும். சமசமாஜிகள் இனப்பிரச்சினையை ஒரு மொழிப்பிரச்சனையாக மட்டுமேபார்வையிட்டனர். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமென்ற வகையில் அவர்களிற்கு சமஷ்டி அரசியல் முறை சார்ந்த சுயாட்சிதான் தீர்வானதென இவர்கள் கருதவில்லை. சமஷ்டிக் கோரிக்கையை இவர்கள் எதிர்த்தனர். ஆனால் இக்காலத்தில் இலங்கை கம்யூனிஸ்ற் கட்சியினர் பிரதேச சுயாட்சிதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகலாமென இவர்களிவட முன்னேற்றகரமாகவே கூறினர். ஆனால் இறுதியில் இந்தக் கம்யூனிஸ்ற் கட்சியினர் கூட 1966ஆம் ஆண்டு பிரதேச "தோசே மசாலவடே அப்பிட்டஎப்பா" என்று தமிழரை இழிவு செய்யும் நோக்கிலான கோசத்தை எழுப்பினர்.

1980களின் மத்தியில் கொல்வின் வெளியிட்ட ஒரு சிறு நூலில் தமிழறிற்கு சுயநிர்வாகம் அவசியமெனக் கூறி தமது கொள்கையில் ஒரு மாற்றம் செய்திருந்தார். மாகாணரீதியானான நிர்வாக முறையைத்தான் இவர் குறிப்பிட்டார். இது இனப்பிரச்சினையை ஒரு நிர்வாகச் சீர்திருத்த எல்லைக்குள் தீர்த்து விடலாம் என்ற வகையான ஆலோசனையாகத்தான் இருந்தது.

எவ்வாறுயினும் மொழிக் கொள்கை விடயத்தில் 1961ஆம் ஆண்டுவரையான கொல்வின் நிலைப்பாடும் போராட்டமும் தமிழ் மக்கள் என்றும் மறந்து போகக்கூடாதது. □

அரசியல் சூதில் போபாலின் அவலம்

போபாலில் ஏற்பட்ட விஷவாயுக் கசிவால் 3500 பொது மக்கள் மாண்டதும் 50,000 பேர்கள் பாதிக்கப்பட்டதும் 2 லட்சம் பேர்வரை அகதிகள் ஆனதும் யாவரும் அறிந்ததே. போபாலில் இருதொழிற்சாலை ஆலையின் உரிமையாளர், அமெரிக்காவின் யூனியன் காபைட் நிறுவனமாகும். அந்நிறுவனத்திடம் நஷ்டஈடாக 3000 மில்லியன் டொலர் தொகையைக் கோரி இந்திய அரசு வழக்குத் தாக்கல் செய்திருந்தது. ஆனால் தற்போது 470 மில்லியன் டொலர்களை நஷ்டஈடாகப் பெறுவதற்கு மேற்படி நிறுவனத்தோடு அரசு ஒப்பந்தம் செய்ததுடன் வழக்கையும் வாபஸ் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது. இவ் உடன்பாடு அரசியல் உள்நோக்கம் கொண்டதெனவும் அமெரிக்கக் கம்பனிகளிடம் ஆளும் கட்சி சரணடைந்து விட்டது எனவும் இந்திய எதிர்க் கட்சிகள் கண்டித்துள்ளன. அத்துடன் மேற்படி நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் பேரணி ஒன்றும் நடைபெற்றதும், எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் வெளிநடப்புச் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

வாழ்வு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதைத்தான் நான் கனித்துவக் காட்சி என்றேன். நிரைப்படப் படைப்பின்போது ஒருவர் கவித்துவக் காட்சியையும், கவித்துவக் நற்பண்பையும் ஒன்றிணைக்க முடியுமானால் அதன் விளைவு, ஒரு அபூர்வ படைப்பாகும். சிறந்த சிலிமாவானது இசைக்கும், கவிதைக்கும் இடையில் எங்கோ ஒரு இடத்தில்தான் இருக்கிறது என நான் சொல்வேன்.

o ஆன்ம விடுதலை என்று சொல்லப்படுகிற ஒருவித மோன அனுபவம் என்று அதைக்கருதலாமா?

* நீங்கள் அதை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அதைப் புரிந்துகொள்ள அது அதிகம் உதவப்போவதில்லை. நீங்கள் அனுபவிக்கிற ஒரு உணர்வை எல்லா சமயங்களிலும் நீங்கள் நினைக்கிறமாதிரி வெளிப்படையாக வெளிப்படுத்தி விடமுடியாது. ஒரு கவிதையை அல்லது நாவலை வாசிக்கும்போதும் ஒரு நிரைப்படத்தைப் பார்க்கும் போதும், அல்லது ஒரு இசையைக் கேட்கிற போதும் அல்லது உங்களின் சிறு குழந்தையிடம் பேசும்போதும் கூட அந்த உணர்வை நீங்கள் அனுபவிக்க முடியும். ஆனால் அது எப்போதும் நிகழவில்லை. அது ஒரு அபூர்வ அனுபவம். நீங்கள் சரியாகச் சொன்னதுபோல அது ஒரு வகை மோன உணர்வுதான். இதனை உணர்கிற ஒரு நிரைப்படப் படைப்பாளன் தான் தற்குறித்தனமான போர்க்கைக் கடந்து செல்வான், செல்ல முடியும்.

தமிழில்: ரவிக்குமார்
நன்றி: மனைஜை □

நிலைமுகம்

22-2-89
புதன்

உதயன், முரசொலி ஆகிய யாழ்ப்பாணப் பத்திரிகைகள் மறுபடியும் வெளிவந்தன. 10ஆம் திகதி முதல் 21ஆம் திகதிவரை இவை வெளிவரவில்லை □ திரு நெல்வேலிச் சந்தி – ஊரும்ரோய்ச் சந்தி – மருதனுமடம் – கொக்குவில் உள்ளிட்ட கோண்டாவில், அன்னங்கை, இணுவில் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது □ வடமராட்சிப் பகுதியில் தொடர்ந்து பதற்றநிலை நிலவுகிறது □ யாழ். பல்கலைக்கழகம் மூடப்படாமல் தொடர்ந்து இயங்க, அனைத்துத் தலைப்பாளரின் ஒத்துழைப்பையும் துணைவேந்தர் கோரியுள்ளார் □ யாழ்ப்பாணத்தில் நடந்த பொலிஸ் கொன்ஸ்ரபிள் தேர்முகப் பரீட்சைக்கு 4 பேர் மட்டுமே வந்திருந்தனர் □ வெளியாப் பகுதியில் 7 சிங்களவர்கள் இனத்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர் □ படையினரின் படகு மோதியதில் மயிலிட்டிக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு மீனவர் மரணமானார் □

23-2-89
வியாழன்

கொக்குவில் பொற்பதி விநியகர் சோர்த்த மக்கள் இரவை புனிதர் சின்னப்பர் ஆலயத்தில் கழித்தனர். நேதாஜி ஒழுங்கையில் சுமார் 25 வீடுகள் எரிக்கப்பட்டதை அடுத்தே பீதியினால், மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறினர் □ தமிழர் விடுதலை கூட்டணியுடனான உறவில் பிளவு ஏற்பட்டதையடுத்து, ஈ. பி. ஆர். எல். எவ். நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபேசுவரையாக இயங்குவார்களென்று, வடகிழக்கு மாகாண அமைச்சர் ஜனப் அபுபுகப் தெரிவித்தார் □ இ. மு. க. எம். பி. வை. கோபாலசாமி இலங்கைக்குச் சென்றிருப்பதை கழகத்தின் பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் ஊர்ஜிதம் செய்தார் □ யாழ். தாதிப் பயிற்சிக் கல்லூரியில் நிலவும் விரிவுரையாளர் பற்றுக்குறையைப் போக்க, தமிழ்நாட்டு விரிவுரையாளர்கள் இருவரின் சேவையைப் பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன □ கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரமும், செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கமும் நமது பதவிகளைத் துறந்தனர் □ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஜோர்ஜ் வினையாட்டரங்கை ஏ. சுதிர்காமர் திறந்து வைத்தார் □

24-2-89
வெள்ளி

ஒமந்தை இறம்பைக்குளம் பகுதியில் முதியவர் ஒருவரின் சடலம் சுட்டுக் காயங்களுடன் கம்பம் ஒன்றில் கட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது □ பகுத்தித்துறையில் மாவட்டக் கிரிக்கட் சங்கம் அங்குராற்ப்பணம் செய்யப்பட்டுள்ளது □ கிளிநொச்சியில் கணேசபுரம் வீதியில் இரு இளைஞர்களின் சடலங்கள் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டன.

25-2-89
சனி

வவுனியாவுக்கு அருகிலுள்ள மூன்று கிராமங்களில் அதிகாலை மூன்று இளைஞர்கள் சுட்டுச் கொல்லப்பட்டனர். இதனால் இக்கிராமங்களில் பீதி ஏற்பட்டுள்ளது □ வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கும் அதிகமான தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு, சுரோஸ் தலைவர் வே. பாலசுமாரர் இலங்கை இந்திய அரசுகளைக் கோரியுள்ளார் □ ஜே. வி. பி. யினர் மாத்தளையில் பொலிஸ் ஜீப்பைத் தாக்கியதில் ஒரு இன்ஸ்பெக்டரும், இரண்டு பொலிஸ்காரரும் இறத்தனர் □ இரவு யாழ். நகரில் வர்த்தக நிலையமொன்றில் 30 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது □

26-2-89
ஞாயிறு

நல்லூரில் காலை 10-30மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார் □ இரவு 8-30 மணியளவில் பருத்தித்துறை நவீன சந்தைக்கருகில் குண்டு ஒன்று வெடித்தது. தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன □ வானகமொன்றில் வந்த சிலரால் யாழ். பல்கலைக்கழக மாணவரான க. சத்தியநாதன், இன்று காலை கடத்திச் செல்லப்பட்டார் □

27-2-89
திங்கள்

நிருகோணமலையிலிருந்து யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த பயணிகள் பஸ், ஹொரவுப்பொத்தானைக்கு அருகில் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது. பயணிகளுக்கு ஒன்றும் நிகழவில்லை □ ஜே. வி. பி. யின் கோரிக்கையினை அடுத்து அனுராதபுர மாவட்டத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது □ சமசமாஜக் கட்சித் தலைவர் கொல்வின் ஆர். டி. சில்வா தனியார் மருத்துவமனையில் காலமானார் □

28-2-89
செவ்வாய்

வெலிஓயா பகுதியில் அண்மையில் நடைபெற்ற சிங்கள மக்களின் கொலைக்கும் நமக்கும் சம்பந்தமில்லையென தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் □

நிகை
NIKAI

ஈழவர் ஜனநாயக முன்னணி அறிக்கை

ஈரோஸின் அரசியல் அமைப்பான ஈழவர் ஜனநாயக முன்னணி, ஸ்ரீலங்கா ஜனநிபதி, பாரதப் பிரதமர், தமிழ்நாட்டு முதலமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ள அறிக்கையின் சில முக்கிய பகுதிகள் இங்கே தரப்படுகிறது.

மாகாணசபை உருவான போது ஏற்பட்ட புதிய சூழ்நிலையால் மக்கள் பாதிக்கப்பட்டிருந்த வேளையில், அவர்களது மன எண்ணங்களைப் பிரதிபலிப்பதற்காக நாம் பாராளுமன்றத் தேர்தலைப் பயன்படுத்துவது என்ற அடிப்படையிலேயே வேட்பாளர்களை நிறுத்தியிருந்தோம்.

நாம் முன்வைத்த தேர்தல் அறிக்கைக்கு நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவானது உறுதியான பெரும்பான்மைப்பலம் ஒன்றை எமக்கு அளித்துள்ளது.

கொள்கைத் தீர்மானங்கள்

(1) இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம்.

(2) வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் செறிவாக வாழும் தமிழ் பேசும் மக்கள் தமக்கான ஒரு பாரம்பரிய பிரதேசத்தை உடையவர்கள்.

(3) 1948 பெப்ரவரி 4 இல் இலங்கை பிரித்தானியரிடமிருந்து விடுவிக்கப்பட்டபோது இலங்கைப் பிரதேசங்களாகக் கணிக்கப்பட்டவர்களும் அவர்களது இயற்கை அதிகரிப்புமே தமிழ் பேசும் பிரதேசங்களைத் தீர்மானிக்கும் கால நியமம் ஆகும்.

(4) வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் செறிவாக வாழும் தமிழ் பேசும் மக்கள் சுயநிர்ணய உரிமையுடையவர்கள்.

(5) தமிழ் பேசும் மக்கள் பிரச்சனைகளுக்கான இடைக்கால தீர்வாக தேசிய அமைப்பு முறை (STATE HOOD) ஒன்றை நிறுவிக் கொள்ள உரித்துடையவர்கள்.

அமைதிக்கான யோசனைகள்

(1) நிரந்தர யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தப்படுவதுடன் பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட்டு அரசியல் கைதிகளும் நிபந்தனையின்றி விடுவிக்க வகை செய்தல்.

(2) வீடுதலை அமைப்புக்களிடையே நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடாத்தி இணக்க நிலைமைக்கு வழியமைத்தல்.

(3) தமிழ் பேசும் மக்கள் தமது பாதுகாப்பை தாமே நிர்ணயித்துக் கொள்ளக் கூடிய வழிவகையை அங்கீகரிக்க வகை செய்தல்.

(4) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டுள்ள இலங்கை, இந்திய இராணுவத் துறையினரின் படைக்குறைப்பு, வெளியேறம் குறித்து கால எல்லை நிர்ணயித்தல்.

(5) தமிழ் மக்களின் தேசிய அந்தஸ்தை நிலை நிறுத்தும் வகையில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை திருத்த வகை செய்தல்.

மேற்குறிப்பிட்ட முடிவினையும் அமைதிக்கான யோசனைகளையும் ஒருமித்த நிலைக்கு இட்டுவரும் வகையில் தமிழ் பேசும் மக்களின் நலன் சார்ந்த அனைத்து சக்திகளையும் உள்ளடக்கிய ஒரு தேசிய மாநாட்டின் மூலம் பொதுநிலையை எம்த ஈழவர் ஜனநாயக முன்னணி தீர்மானித்துள்ளது.

ஈழப்பயங்கரவாதிகள் தாங்கள் பெற்றுக் கொண்டுள்ள தனித்துவ உரிமைகளை தாங்களே விடமாட்டார்கள். நாடு இதனால் அடிமைத்தனத்திலிருந்து விடுபடமாட்டாது. அதனால் தான் பொதுத்தேர்தலை பகிஷ்கரித்து, தாய் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் எங்களோடு பங்கெடுக்குமாறு பொதுமக்களை நாம் வேண்டிக் கொள்கிறோம்.

கொல்வின்: தீர்க்கதரிசனம், 'இமாலய'த் தவறு

(எமது அரசியல் நிருபர்)

பழுத்த இடதுசாரித் தலைவரான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா தேசியப்பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட ஒரு சில இனங்களுக்குள் இயற்கை மரணமெய்நியதால், அரசியல் வட்டாரங்களில் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

வரலாற்று நிபுணராகவும், பிரபல சட்டத்தரணியாகவும் விளங்கிய கலாநிதி கொல்வின், தனது கலாநிதிப் பட்டத்திற்கு Ceylon under British Rule பிரித்தானியராட்சியில் இலங்கை என்ற நூலை எழுதினார்.

தனிச்சிங்களச் சட்டம் பண்டாரநாயக்காவின் ஆட்சியில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது கலாநிதி கொல்வின் தீர்க்க தரிசனமாகச் சொன்னார்: "ஒரு மொழி இரு நாடுகள்; இரண்டு மொழிகள் ஒரு நாடு."

சிங்கள மொழி தமிழர்கள் மீது திணிக்கப்படுவதால் ஒந்த நாடு பிளவுண்டு போகக் கூடிய ஆபத்திலே, 1956ஆம் ஆண்டிலேயே அவர் உணர்ந்திருந்தார் என்பதை இது காட்டுகிறது.

இவ்வாறெல்லாம் வரலாற்று உணர்வும், தீர்க்கதரிசனமும் பெற்றிருந்த கலாநிதி கொல்வின் 1970இல் இருமுறை சிறிமாவோபண்டாரநாயக்காவின் தலைமையின் கீழ் 2/3 பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வந்த இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அரசியல் அமைப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டபோது என்ன செய்தார்?

மொல்கோ சாரிபு கொம்யூனிஸ்ற் கட்சியின் யாழ். மாவட்டக்குழு உத்தியோகபூர்வமாக, அப்போது விடவைப்பு அமைச்சராக இருந்த பீட்டர் கெனமன் தலைமையில் சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து, பண்டாரசெல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏற்ற வழிவகைகள், புதிய அரியலமைப்பில் செய்யப்பட வேண்டுமென, வற்புறுத்தினாயு.

கொம்யூனிஸ்ற் கட்சி கூறிய அந்த ஆலோசனையை சிறிமாவோ ஏற்றுக் கொள்ளவிருந்த சமயத்தில், அரசியலமைப்பு அமைச்சராக இருந்த கலாநிதி கொல்வின் நீதிமன்றங்களில் பேசுவது போன்று (பழக்கதோஷமோ) வாதாடி, இந்த ஆலோசனை ஏற்கப்பட்டால் இடதுசாரி ஐக்கிய முன்னணியை எரிக்த்து பௌத்த சங்கத்தினரும், சிங்களவர்களும் கிளர்ந்தெழுவார்கள் ஆட்சி கவிழும் என அச்சுறுத்தியதால், இருமுறி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொம்யூனிஸ்ற் கட்சியின் ஆலோசனைகளை நிராகரித்தார்.

அன்று அந்த ஆலோசனை ஏற்கப்பட்டிருந்தால் தமிழத் தீவிரவாதம் தோன்றியிருக்காது. நாடு பிளவுண்டிருக்காது, அந்நியர் யாரும் இங்கு வந்திருக்கவும் மாட்டார்கள்.

இத்தகவல்களை கொம்யூனிஸ்ற் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான வ. பொன்னம்பலம், கட்சியோடு நெருங்கியிருந்த சிலருக்கு மனவருத்தத்தோடு தெரிவித்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

விஜயவீராவும். . . .

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்தியா அந்நிய நாடுகளோடு கூட்டாகச் சேர்ந்து செய்துள்ள 26 வியாபார முதலீடுகளில் 18 இலங்கையில் இடம்பெற்றுள்ளது. இலங்கை ராணுவம் தனக்கு விருப்பமான நாடுகளிலிருந்து வேறு ஆயுதங்களை வாங்க முடியாத நிலையில் உள்ளது. அண்மையில் அது ஹெலி கொப்டர்களை வேறு நாட்டிடம் இருந்து வாங்கமுற்பட்டபோது இந்தியாவால் தடுக்கப்பட்டது உங்களுக்குத் தெரியுமா?

இன்றைய இலங்கையின் எந்தப்பிரச்சனையும் ஜனாதிபதித் தேர்தலாலோ பொதுத் தேர்தலாலோ தீர்க்கப்படப் போவதில்லை. இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் தாகுகப்போகமாட்டார்கள். தொண்டமானும் ஜெயவர்தனவும் தானாகப் போகமாட்டார்கள். தமிழ் ஈழப்பயங்கரவாதிகள் தாங்கள் பெற்றுக் கொண்டுள்ள தனித்துவ உரிமைகளை தாகுக விடமாட்டார்கள். நாடு இதனால் அடிமைத்தனத்திலிருந்து விடுபடமாட்டாது. அதனால் தான் பொதுத்தேர்தலை பகிஷ்கரித்து, தாய் நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் எங்களோடு பங்கெடுக்குமாறு பொதுமக்களை நாம் வேண்டிக் கொள்கிறோம்.

ஜே. வி. பி . . ..

1ஆம் பக்கத் தொடர்ச்சி

கூறப்படும் ஒழுங்கீனங்களைக் குறித்தே, இவை வெளிவந்துள்ளன எனக் கருதப்படுகின்றது.

இப்பொழுது ஆட்சியில் உள்ளவர்களுக்கு அரசியல் ஆயுள் 6 மாதங்களே என்றும் அச்சுவரொட்டியில் கூறுகின்றனவாம்.

ஷெல் தாக்குதல்

கடந்த வியாழன் இரவு கோப்பாய் பகுதியில் நடந்த தாக்கல் கூறப்படும் சில அசம்பாவிதங்கள் தொடர்பாக அப்பகுதி அதிக ஜனநடமாட்டம் இல்லாமல் இருப்பதோடு இன்று (வெள்ளி) நமது பத்திரிகை அச்சுக்குப் போகும் சமயத்தில் தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் கேட்டவண்ணம் இருந்தன.

'பொட்டேட்ரோ' சண்முகம் விவகாரம்: உண்மை அம்பலமாகுமா?

பிரபல தமிழ் வர்த்தகர் 'பொட்டேட்ரோ' சண்முகமும் அவரது இனிய சகோதரர் சுப்பிரமணியமும் புறக்கோட்டையிலுள்ள தமது அலுவலகத்தில் இனந்தெரியாத இனைஞர்களால் பொதுத் தேர்தலுக்குச் சற்று முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டது எல்லோர்க்கும் தெரிந்ததே!

சண்முகம் யாழ்பாணம் கருவிலைச் சேர்ந்தவர்; அவரது மகன் பிரபல எலும்பு முறிவு அறுவை மருத்துவராக(Orthopaedic Surgeon) கொழும்பில் பணிபுரிகிறார்.

'பொட்டேட்ரோ' (உருளைக் கிழங்கு) சண்முகமும் சகோதரனும் 'சீனி விவகாரம் தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டு, இரகசியப் பொலிசாரின் 'நான்காம் மாடி' விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர்.

இறக்குமதி செய்யப்படாத சீனியை, நீரில் மூழ்காத கப்பலில் அழிந்ததாகப் பொலிக் கோரிக்கையை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குக் சமர்ப்பித்து, பல இலட்ச ரூபாய்களைத் 'தட்டிக்' கொண்டு சென்று. விட்டனர் என்பதே பொலிசாரின் முக்கிய குற்றச் சாட்டு.

எமில் சவுத்கரநாயகத்தின் விவகாரம் மீண்டும். .

விசாரணைகளின் போது, சிரேஷ்ட அரசியல்வாதிகளினதும், உயர் அதிகாரிகளினதும் பெயர்கள் அடிபட்ட போதிலும், கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகைகள் இவ்விவகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

இப்பொழுது இது முன்பக்கத் தலைப்புச் செய்தியாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவருவதற்கும், பிரதமர் ஒட்டப் பந்தயத்திற்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா என அரசியல் அவதானிகள் கேட்கத் தொடங்கியுள்ளனர்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் 154 ஆவது ஜெயந்தி

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் 154 வது ஜெயந்தி தினவிழா எதிர்வரும் 5. 3. 89 வியாழக்கிழமை, வழமையான காலை பூஜை ஆராதனைகளுடன், திருநெல்வேலியிலுள்ள ஆடிய பாதம் விதி "இராம கிருஷ்ண லயத்தில்" இடம் பெறும். மாலை நிகழ்ச்சிகளாக, இ. ஜெராஜ் (கம்பன் கழகம்) அவர்களின் பேச்சு இடம் பெறுவதோடு திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்களின் இன்னிசைக் கச்சேரியும் இடம் பெறும்.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூசரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 4-3-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
Regtered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.